விலை: 30.00
பக்கங்கள் : 12+12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 035 வள்ளுவர் ஆண்டு 2053 தை 10 ஞாயிற்றுக்கிழமை (23.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## என்னை ஒருபோதும் சிறைப்படுத்த முடியாது

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)
இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு தன்னை சிறைப்படுத்த முடியாது எனவும் தன்னை சிறைப்பிடிப்பதற்கான காரணங்களோ அல்லது சாட்சிகளோ ▷11

## மக்கள் பணத்தை கொள்ளையடித்து
# வயிற்றை நிரப்பும் ராஜபக்ச அரசாங்கம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு)
தமது வயிற்றையும் பொக்கெட்டுகளையும் நிரப்புவதற்காக அப்பாவி மக்களின் பணத்தை கொள்ளையடிக்கும் யுகத்தை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிரிக்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.
(11ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு கொரோனா

(கொழும்பு)
பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மாத்தளை பாராளுமன்ற உறுப்பினர் நாலக்க கோட்டேகொடவுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.
அவருக்கு மேற்கொள்ளப்ப ▷11

# சிங்கள பௌத்த பாரம்பரியத்தை அழிவிலிருந்து பாதுகாத்தேன்

## பௌத்த ஆலோசனைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)
**அழியும் தருவாயில் இருந்த சிங்கள பௌத்த பாரம்பரியத்தை கொரோனாத் தடைகளுக்கு மத்தியிலும் பார்துகாத்தேன் என பௌத்த ஆலோசனைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பௌத்த ஆலோசனை சபையின் 12ஆவது கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
மேலும் குறித்த கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த மகா சங்கத்தினர், "கூரகலை புனித பிரதேசம், முஹுது மஹா விகாரை உள்ளிட்ட வடக்கு, கிழக்கில் உள்ள விகாரைகளைப் பாதுகாத்து, நாட்டுக்கு உரிமையாக்குவதற்கு கடந்த இரண்டு வருடங்களில் ஜனாதிபதி அவர்கள் மேற்கொண்ட ▷11

## இலங்கையில் மேலும் 75 பேருக்கு 'ஒமிக்ரோன்'

(கொழும்பு)
இலங்கையில் மேலும் 75 புதிய ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு, ஒவ்வாமை மற்றும் மூலக்கூறு பிரிவின் பிரதானி வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரி ▷11

## மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இலங்கை அறிக்கை மிகைப்படுத்தப்பட்டது

வெளிவிவகார அமைச்சு விசனம்

(கொழும்பு)
மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்ட உலக அறிக்கையில் இலங்கை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைவரத்தை எதிர்மறையாக சித்தரிக்கக்கூடிய வகையில் அமைந்திருப்பதும் அதில் தேவையற்றதும் மிகைப்படுத்தப்பட்டது ▷11

## இந்த வருடத்திற்குள் புதிய அரசியலமைப்பு

அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)
புதிய அரசியலமைப்பை இந்த வருடத்திற்குள் கொண்டுவருவதற்கு அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டுவருவதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## கொரோனா
**12 — மரணம்**
**845 — தொற்று**

(கொழும்பு)
கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 12 பேர் ▷11

## வைரஸ் காய்ச்சல் நாட்டில் பரவுகின்றது

பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)
நாட்டில் ஒருவிதமான வைரஸ் காய்ச்சல் பரவிவருவதாக பொதுமக்களுக்கு சுகாதாரத் தரப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. ▷11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 74 ஆம் ஆண்டு அச்சுவினி நட்சத்திரம் மேட ராசியில் பிறந்த கனடாவில் நிரந்தர வசிப்பிடம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. (9788)

**0016136639641**

## காணி விற்பனைக்கு

உடுவில் பொது வாசிகசாலை, பிரதேச செயலகம் ஆகிய இடங்களிற்கு மிகவும் அருகாமையில் (50 மீற்றர் தூரத்தில்) 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**Contact number**
**Sam Deluxan Jesujeyaselan**
**+94 77 227 6563** (C-3602)

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (9770)

**☎-070 640 5951**
e-mail : engchelvam@gmail.com

## SPOKEN ENGLISH

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
- IELTS (students visa)
- IELTS LIFE SKILLS A1 (London)

நேரடியாகவும் online மூலமாகவும் நாட்டின் எப் பகுதியிலிருந்தும் கற்கலாம். **072 267 6713** (9790)

## வேலையாட்கள் தேவை

இருபாலையில் உள்ள வாகன சுத்திகரிப்பு நிலையமொன்றுக்கு சுத்திகரிப்பாளர்கள் தேவை. (C-3607)

தொடர்புகளுக்கு:-
**077 353 3964**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் 20 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

நல்ல சூழல்.
வீடு அமைப்பதற்கு உகந்தது.

**நிலப்பரப்பு**
**24 அடிப் பாதையுடன்**
**பலாலி வீதியிலிருந்து**
**500 மீற்றர் தூரம்** (9796)

தொடர்பு
**077 658 5999**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் IELTS, $A_1$ UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH
- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK $A_1$ Exam.
- Exam Registration center.

வகுப்புக்கள் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.
**OXFORD ENGLISH ACADEMY,**
**Ariyakulam junction, Jaffna.** (9302)

**TP : 077 780 3970, 074 007 1970**

## யாழ். கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், Facial, அழகுக்கலை, உணவுகள் தயாரித்தல் பயிற்சிகளின் 2021ம் ஆண்டு மாணவிகளின் பரீட்சைகளுக்காக இடைநிறுத்தப்பட்டிருந்த கிழமை நாள் மற்றும் சனி ஞாயிறு புதிய பிரிவுகளுக்கு வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பமாகின்றன.

பதிவுகளை மேற்கொண்டிருந்தவர்களும், புதிதாக கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், Facial, அழகுக் கலை, உணவுகள் தயாரித்தல் ஆகிய பயிற்சிகளில் சேர விரும்புவர்களும் தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை நேரில் வந்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். -இயக்குநர் (C-3599)


### மாலைதீவு ஜனாதிபதிக்கு தொற்று

(மாலே)

மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சோலிக்கு கோவிட் தொற்றுறுதியாகியுள்ளது.

அவரது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட கோவிட் பரிசோதனைகளின் போதே அவருக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளதாக அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவர் தனது வீட்டிலேயே தனிமைப்படுத்தலில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## தேவை

### பொதி செய்பவர், சாரதி

யாழ். நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு பொதி செய்பவர், சாரதி தேவை.
வயதெல்லை (21 - 35) இற்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
**வ.வ.இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்**
**இல. 58, நல்லூர் குறுக்கு வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.இல : 021 222 4766** (9784)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 09 - 01 - 1945
விண்ணில் 15 - 01 - 2020

### அமரர் சுபத்திராதேவி தணிகாசலம்பிள்ளை

திதி:- சஷ்டி 23.01.2022

அமுதூட்டி அரவணைத்த எங்கள் தெய்வமே!
ஆண்டு இரண்டு பறந்தோடிச் சென்றதம்மா!
இணையில்லா இன்புறு வாழ்வை எமக்களித்து.
உறுதியுடன் எமைக்காத்த உத்தமியே!
உதித்த திங்களிலே உதிர்ந்த எம் குலவிளக்கே!
உங்கள் ஒளிமுகத்தை முன்னிறுத்தி தவிக்கின்றோம்
உறவாடி குதூகலிக்க நீங்களின்றி
நெஞ்சில் ஆறாத வலிகளுடனும்
என்றும் நீங்காத நினைவுகளுடனும்

"சுபஸ்தான்"
நாச்சிமார் கோவிலடி,
1036, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (9746)

என்றென்றும் உங்கள் பாசத்திற்குரிய
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 04 . 1950
இறப்பு 22 . 01 . 2022

### திருமதி பூமணி மார்க்கண்டு

பிறவளவு இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி மார்க்கண்டு அவர்கள் நேற்று (22.01.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும் செல்வராணி, செல்வரட்ணம் (ஆசிரியர் - வீரகத்திபிள்ளை மகா வித்தியாலயம், தொண்டைமானாறு), செல்வரஞ்சினி (லண்டன்), செல்வபவானி (லண்டன்), செல்வதாஸ் (ஆசிரியர் - தேவரையாளி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அருந்தவச்செல்வம், தமயந்தி, ஜோதீஸ்வரன், தவநேசன், மயூரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் வல்வை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி. (C-3605) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023 இல் பாராளுமன்றம் கலைக்கப்படும்

## தென்னிலங்கை ஊடகம் தகவல்

(கொழும்பு)

**எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி நள்ளிரவு பாராளுமன்றம் கலைக் கப்படக்கூடிய சாத்தியங்கள் அதிகம் உண்டென அரச தரப்புத் தகவல்களை மேற்கோள்காட்டி தென்னி லங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

20 ஆம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி குறித்த தினத்தில் பாராளுமன்றை கலைக்க முடியும் என தெரிவிக்கப்படும் நிலையில், குறித்த செய்தி வெளிவந்துள்ளது.

இது குறித்த செய்திக் குறிப்பில், ஏற்கனவே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஓராண்டு காலம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதன்படி, 2023 மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் பொதுஜன முன்னணியிடம் இருக்கும் போதே தேர்தலை நடத்தவும் இந்தியாவிற்கு அளிக்கப்பட்ட உறுதி மொழிக்கு அமைய மாகாண சபைத் தேர்தலையும் நடத்தவும் இதன்படி ஒன்றன்பின் ஒன்றாக மூன்று தேர்தல்களை அரசாங்கம் அடுத்தடுத்து நடத்தவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கம் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் உத்தேசித்துள்ளது.

எவ்வாறெனினும், அரச தலைவருக்கான தேர்தல் முன் கூட்டி நடத்தப்படாது எனவும், 2024 ஆம் ஆண்டில் நடத்தப்படும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## க.பொ.த(சா/த) பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(கொழும்பு)

கல்விப்பொதுதராதர சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

அதன்படி, விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (நி)



பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கும் சனசமூக நிலையங்களுக்கும் இதர பொது அமைப்புகளுக்கும் உதவித் திட்டங்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. (படம்- கஜிந்தன்)

## தனியார்துறை ஊழியர்களுக்கான
# இழப்பீட்டு தொகையை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

கடமையின் போது விபத்துக்களில் உயிரிழக்கும் தனியார் துறை ஊழியர்களுக்கு வழங்கப்படும் நட்டஈட்டை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பணியிடங்களில் ஏற்படும் விபத்துக்களினால் மரணமடைந்த அல்லது நிரந்தர ஊனமுற்ற தனியார் நிறுவன ஊழியர்களுக்கான இழப்பீட்டுத் தொகையை 20 இலட்சமாக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இதற்கமைய, பணியிடங்களில் ஏற்படும் விபத்தில் மரணம் ஏற்படும் பட்சத்தில் இது வரை வழங்கப்பட்ட 550,000 ரூபாவை 2,000,000 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி)




கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் பொ. வாகீசன்
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் கணபதிப்பிள்ளை பொன்னையா

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காற்றிலே வந்த செய்தி கானலாகிப் போகாதா என
கலங்கி துடித்தபடி கதறுகின்றோம்
வாழ்விற்கு இலக்கணம் வகுத்து வாழ்வாங்கு
வாழ்ந்தவரே வானுறையும் நீங்கள்
தெய்வத்துள் வைக்கப்பட
இறைவனை வேண்டுகிறோம்.

தோற்றம் 1938.12.18
மறைவு 2022.01.21

பிரிவினால் துயருறும்...

தே.நடனகுமார் (அவுஸ்திரேலியா)
தே.நந்தகுமார் (லண்டன்)

(C-3606)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(9800)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.



## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1977, உத்திரட்டாதி, கி.பா. 17, சொந்த தொழில் செய்யும் மணமகனிற்கு மணமகள் தேவை.
நேரடித் தொடர்புகளிற்கு

**076 449 6275**

(9792)


# ஹர்பஜனுக்கு கொவிட்

இந்தியாவில் ஒமிக்ரோன் தொற்று அதிவேகமாக பரவிவரும் நிலையில், மாநில அரசுகள் பல கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

சமீப காலமாகவே பிரபலங்கள் கொரோனா தொற்றுக்கு ஆளாகி வருவது அதிகரித்து வருகிறது. இந்நிலையில் இந்திய அணியின் முன்னாள் வீரரான ஹர்பஜன் சிங்குக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இது குறித்து அவரே டுவிட்டரில் மிகவும் லேசான அறிகுறிகளுடன் எனக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

இதன் காரணமாக நான் வீட்டில் தனிமைப்படுத்தி கொண்டுள்ளேன். கடந்த சில நாட்களாக என்னுடன் தொடர்பில் இருந்த அனைவரும் கொரோனா பரிசோதனை செய்து கொண்டு கவனமாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் என பதிவிட்டுள்ளார். (4-6)


## RAVEENS E.M.C

**KARAVEDDY**

**Yr 6 Admission (2022)**

English Medium

Admission Forms are Available

**✆-076 416 9845**

P.EASWARANATHAN - Director

(C-3603)



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1532**



## நீர்க்கசிவை நிறுத்துவதற்கு
## Water Proofing

Skyline Holders (PVT) ltd

சீமெந்தினால் கட்டப்பட்ட புதிய / பழைய கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவு சம்பந்தமான பிரச்சினைகளை 10 வருட உத்தரவாதத்துடன் செய்து தருகிறோம்.

**நீர்க்கசிவு இரசாயனங்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.**

சீமெந்து மேற்பரப்பை உடைக்காமல்
(குளியல் அறை மாபிள்கள், நிலப்பரப்பை)
மேலதிக செலவுகள் இன்றி நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வை Mr. Seal தருகிறது.

**Skyline Holders (Pvt) Ltd.**

No. 89, Old Park Road, Jaffna.
யாழ்ப்பாணம் - 077 722 0095, 076 663 6481, 021 221 4994
முல்லைத்தீவு - 077 741 4960
மன்னார்/ வவுனியா - 077 279 0743

(9794)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 10 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நாவற்குழி சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்.
வீடமைப்பதற்கு நல்ல சூழல்.
(நிலப்பரப்பு)
ஒரு பரப்பின் விலை 5 இலட்சம்.

(9797)

தொடர்பு

**076 890 9259**
**077 015 0353**


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
ஆசிரியர்
**திரு. பொ. வாகீசன்**
அவர்களின்
அன்புத் தந்தையார்
அமரர்
**கணபதிப்பிள்ளை பொன்னையா**

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ கனகரத்தினம் ம.ம.வி.**

(9793)

# மரண அறிவித்தல்



## திருமதி
## தயாநிதி பாஸ்கரன்

**பிறப்பு : 1963.01.28 இறப்பு : 2022.01.19**

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாநிதி பாஸ்கரன் அவர்கள் கடந்த 19.01.2022 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் லட்சுமி அம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் பாஸ்கரன் அவர்களின் அன்பு மனைவியும் சர்வேஸ்வரன், கஜேந்தினி, கீர்த்தனா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயராசன், சுமிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் அக்ஷயா, விஹஸ்மி, அஹனா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(9803)

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. **077 367 3826** தகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

வீட்டு வேலை மற்றும் முதியோர் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பாளர்கள் மலையகம் மற்றும் கொழும்பை அண்டியவர்கள் தேவை.

வேலை அனுபவமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (சி-1610)

**074 055 5922**

## தேவை

விற்பனை பிரதிநிதி (பெண்)
அனுபவமுள்ளவர் தேவை (சி-1611)

**074 055 5922**


என்றும் எம் நினைவைவிட்டு அழியா நினைவுகளுடன் வாழும் பாசமலர்களின்

## 12 ம் ஆண்டு நினைவஞ்சலி



கலாபூஷணம்
செல்லையா மெற்றாஸ்மயில்

திதி. 23.01.2022

மின்னலென மறைந்ததே பதினொரு ஆண்டுகள்
என் செய்வோம் இறைவன் சித்தம் இது
இனி நாம் காணமுடியாத சோக நினைவோடு
இங்கிருந்து ஏங்கி அழுகின்றோம்
உங்கள் பிரிவை மாறாத வடுக்களாய்
மனதில் சுமந்து நடைப்பிணமாய் வாழ்கின்றோம்

அன்புச் சகோதரர்களின்
ஆத்ம சாந்திக்காக
இறைவனை அனுதினமும்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



திருமதி.
உதயராணி கோபாலகிருஷ்ணன் (9775)

18, முத்தவிநாயகர் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்
தொ.இ- 021 222 3586

# யாழ்ப்பாணம் உட்பட நான்கு நகரங்களில்

## காற்று மாசுபாடு வீதம் உயர்வு



(கொழும்பு)

நாட்டின் நான்கு முக்கிய நகரங்களில் காற்று மாசுபாட்டின் விகிதம் உயர்ந்துள்ளதாக காற்று தர ஆய்வுகளின் மூத்த விஞ்ஞானியும் NBRO இன் சுற்றுச்சூழல் பணிப்பாளருமான சரத் பிரேமசிறி தெரிவித்தார்.

கொழும்பு. கண்டி. யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளிலேயே காற்றின் தர சுட்டெண் மிகவும் மோசமான நிலையில் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடகிழக்கு வளிமண்டலத்திலுள்ள மாசுபட்ட மேகங்கள், நிலவும் வடகிழக்கு பருவக்காற்று காரணமாக உள்நோக்கி கொண்டு வரப்பட்ட மாசடைந்த மேகங்களின் தாக்கமே இவ்வாறு அதிகரித்த காற்று மாசுபாட்டிற்கு காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான எரிபொருட்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. இதுவும் காற்று மாசுபாட்டிற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

இதன் விளைவாக மேல். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் குறிப்பாக அதிகளவில் பாதிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## 31 ம் நாள் நினைவில்    48 ம் நாள் நினைவில்



அமரர். திருமதி
**வீரவாகு கமலாதேவி**

மலர்வு 10.03.1949 | உதிர்வு 25.12.2021

**இமைமூடும் நேரத்தில் எங்களை விட்டுப் பிரிந்தீர்கள்
எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்...**

இருவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 23.01.2022 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். நாளை 24.01.2022 திங்கட்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இந்திரன் அம்மன் கோவிலடி,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

குடும்பத்தினர்.



அமரர்.
**வீரவாகு வீரகுமார்** (சி-3601)

மலர்வு 26.03.1972 | உதிர்வு 27.11.2021

## இராசிபலன்

23.01.2022
தை 10, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி முற்பகல் 7.47 மணிவரை

உத்தரம் முற்பகல் 9.54 மணிவரை
சுபநேரம் - 9.36-11.06 மணிவரை
இராகுகாலம் -5.06-6.36 மணிவரை

சந்திராஷ்டமம்- சதயம்

வளவன்



மேஷம்

மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள் , தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாக மடைவீர்கள்,உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.



கடகம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்கள்உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், போசன சுகமுண்டு.



துலாம்

காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், சஞ்சலங்கள் சற்று கூடும்.



மகரம்

குறை சொன்னவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் பெருக வழியமைப்பீர்கள்.



ரிஷபம்

பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், கனவுகள் நனவாக கண்ணனை வழிபட வேண்டிய நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாக்கு மேன்மையுண்டு.



விருச்சிகம்

எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு,குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.



கும்பம்

வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், மருத்துவ செலவுகள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நிதானத்துடன் செயற்பட வேண்டிய நாள்.



மிதுனம்

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வெளியூர்த் தொடர்புகள அனுகூலம் தரும்.



கன்னி

பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை



தனுசு

பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப்பிடிப்போடு, செயற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.



மீனம்

உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**உன் மனதிற்கு ஒப்பு கொடு, அது அமைதியில் வளரட்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை சான்றிதழ் வழங்கும் ஒரு நாள் சேவை இடை நிறுத்தம்

(கொழும்பு)

ஒரு நாள் சேவை ஊடாக பரீட்சை சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை நாளை திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே, சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிப்பதற்கு, நிகழ்நிலை முறைமையிலும் மின்னஞ்சல் ஊடாகவும் மாத்திரம் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

தேவையான சான்றிதழ்கள் வெளிவிவகார அமைச்சுக்கு அல்லது விண்ணப்பதாரரின் முகவரிக்கு விரைவு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு அதிகளவான பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையினால் ஒருநாள் சேவை ஊடாக சான்றிதழ் வழங்கும் சேவையை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டியுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு www.doenets.lk என்ற பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.

அத்துடன் "Exams Sri Lanka" என்ற உத்தியோகபூர்வ கையடக்கத் தொலைபேசி செயலியைச் செயற்படுத்துவதன்மூலம், சான்றிதழுக்காக விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (நி)

# 15 அடி பள்ளத்தில் பாய்ந்தது மோ.சைக்கிள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொக்குவில் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று பேருந்திற்கு இடம் விட முயன்ற சமயம் சுமார் 15 அடி வெள்ள வாய்க்காலிற்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்றுக்காலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் அதிர்ஷ்டவசமாக சிறு காயங்களுடன் தப்பிய நிலையில் சிகிச்சைக்காக மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-6-104)

# கடலாமையுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

விற்பனை நோக்கில் கடலாமையைப் பிடித்து வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த வியாழக்கிழமை இரவு தென்மராட்சி-கச்சாய் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கொடிகாமம் பொலிஸ் மற்றும் இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கச்சாய் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 36 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கடலாமையுடன் கைதாகியுள்ளார்.

கைதான நபரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியதில் அவரை ஒன்றரை இலட்சம் ரூபாய் ஆள்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (4-5-30)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

இளவாலை சென்ஜேம்ஸ் புனித டொன் பொஸ்கோ கழகத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்படி கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இளவாலை சென்ஜேம்ஸ் யாகப்பர் ஆலயப் பங்குப் பணிமனையில் இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

# வரணியில் விபத்து பெண் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு கறுக்காய் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்தவர் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றும் குடத்தனைப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்:சதயம் 2<br>கி.பா: 54 சூரி 10 செவ்1 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: A/L லண்டன் இந்தியா வந்து திருமணம் செய்யலாம்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு.வெளிநாடு<br>தொ.இ: **B/6877** | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 3<br>கி.பா:**23 ½** சூரி.செவ் 2இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:**MSc** அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு:விஞ்ஞான பட்டதாரி<br>தொ.இ:**G/6902** |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: சூரி 10 செவ்1 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில் A/L லண்டன் PR இல்லை<br>தொ.இ: **B/6880** | பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்:மகம்<br>கி.பா:- சூரி 3 செவ் 9இல்<br>தகமை/தொழில்:**BA, MA** பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு.உள்நாடு ஆயின் அரச உத்தியோகம்<br>தொ.இ:**G/6945** |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி 3<br>கி.பா:-39 சூரி.செவ் 4 இல்<br>உயரம்:**180 cm**<br>தகைமை/தொழில்:**O/L** வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: தொழில்புரிபவர்<br>தொ.இ: **B/6914** | பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்:கேட்டை<br>கி.பா: சூரி 1 செவ் 12இல்<br>உயரம்:5'1"<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் காரைநகர் விரும்பத்தக்கது<br>தொ.இ:**G/6943** |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்:**163 cm**<br>கி.பா:35 சூரி.செவ் 6 இல்<br>தகைமை/தொழில்: **B.Sc** பொறியியலாளர் (அரச)<br>தொ.இ: **B/6974** | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: சூரி, செவ் 12 இல் உயரம் :5'6"<br>தகைமை/தொழில்:உயர்தரம்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் அல்லது தனியார் உத்தியோகம்<br>தொ.இ:**G/6981** |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம். 1979 கார்த்திகை-4, பல்கலைக்கழக பேராசிரியருக்கு தகுந்த மணமகள் தேவை. குறுகிய கால விவாகரத்து. (C-1608)

**தொடர்புக்கு:**
**077 784 0262**

## சேவை

முதியோர் பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைக்கு எம்மிடம் அனுபவம் உள்ளவர்கள் உள்ளனர். (கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம்) (C-1609)

**தொடர்புக்கு:**
**074 055 5922**

## சிறுநீரகம் தேவை

AB+ (Positive) குருதி வகையுடைய 55 வயதுப் பெண் ஒருவருக்கு சிறுநீரகம் தேவை. இவருக்கு அனைத்து வகை குருதி கொண்ட சிறுநீரகமும் பொருந்தும்.

(9743)

**தொடர்புக்கு**
**076 202 3467**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### அகில இலங்கை மட்டத்தில் வெற்றி



புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இலக்கியப் போட்டித் தொடரில் இலக்கிய விபரணப் போட்டியில் கவிஞர்

**ஆ.முல்லைதிவ்யன்**

தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம் பெற்றுள்ளார். இவர் பிரதேச. மாவட்ட மட்டங்களில் முதலாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர் இலக்கியப் பணி தொடர வாழ்த்துகின்றோம்

(9769) **கல்லை நண்பர்கள்**


---

EURO IMPLEMENTS

**எல்லா வேலைகளுக்கும் முழு அளவிலான இயந்திர மயமாக்கல் தீர்வுகளை நாங்கள் வழங்குகின்றோம்**

### EURO ROTARY TILLER (ROTAVATOR)


ITALIAN BLADES FITTED



42 L TYPE BLADES ROTAVATOR
**Rs 425,000**

- Less Maintenance
- High Quality Italian Blades
- Light Weight
- 6Ft suitable for above 45 HP tractors
- Best suitable for puddling in paddy fields
- Side Disc

### EURO SPRING CULTIVATOR



9 TINE CULTIVATOR
**Rs 99,000**

- Heavy Angle Frame
- High tensile plated fasteners
- CAT-II hitch geometry
- Less maintenance required
- Reversible Shovel
- Good Quality Shovel


### EURO DISC HARROW



14 DISC HARROW
**Rs 215,000**

- High quality boron steel discs
- Ideal for breaking of roots
- Easily transportable
- Sturdy Frame
- Angle can be easily adjustable
- Can work in extreme conditions

### EURO DISC PLOUGH



2 DISC PLOUGH
**Rs 189,000**

- Disc can be adjusted in three stages according to soil conditions
- Tractor is directly attached to Three Point Cat II – Linkage
- Robust design & heavy duty pipe frame
- Hard wearing discs blades
- Highly durable & superior quality
- Low maintenance cost

விற்பனை ஹொட்லைன் : 077 722 2029 / 076 990 4709
Manivannan Motors : 077 438 4253

ASIA LANKA MACHINERY (PVT) LTD
asialankamachinery.com

(9791)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்போக நெல் அறுவடை வீழ்ச்சி !

## பாரிய உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம்

### விவசாயத்துறை பேராசிரியர் சமன் தர்மகீர்த்தி எச்சரிக்கை

(கொழும்பு)

**பெரும்போக விவசாயத்தில் இம்முறை நெல் விளைச்சல் 50 சதவீதத்தினால் குறைவடையும். இதனால் எதிர்காலத்தில் பாரிய உணவுப் பற்றாக்குறையினை எதிர்கொள்ள நேரிடும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாயத் துறை பேராசிரியர் சமன் தர்மகீர்த்தி தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பெரும்போக விவசாயத்தில் சேதனப் பசளை பாவனையினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு, விவசாயிகள் விவசாய நடவடிக்கையில் இருந்து விலகியுள்ளமை உள்ளிட்ட காரணிகளினால் பெரும்போக விவசாயத்தில் இம்முறை நெல் விளைச்சல் 50 சதவீதத்தினால் குறைவடையும்.

அநுராதபுரம், மின்னேரிய ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு நடவடிக்கையில் பல்வேறு விடயங்களை எம்மால் விளங்கிக்கொள்ள முடிந்துள்ளது. தற்போது பயிர்செய்யப்பட்டுள்ள நெற் செய்கையில் போசணை குறைந்துள்ளதையும், மணவளம் பாதிக்கப்பட்டுள்ளதையும் நன்கு அவதானிக்க முடிகிறது.

விவசாயத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை உரிய தரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நெற் பயிர்ச்செய்கை மாத்திரமல்ல சோளம், தேயிலை உள்ளிட்ட அனைத்து பயிர்ச் செய்கைகளும் பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளன.

தூரநோக்கமற்ற வகையில், அறிவியல்பூர்வமான தரப்படுத்தல்களுக்கு முன்னுரிமை வழங்காமல் விவசாயத்துறையில் முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்களின் எதிர் தாக்கத்தை முழு நாடும் தற்போது எதிர்கொண்டுள்ளது.

சேதன பசளையினை பயன்படுத்துவதா? அல்லது இரசாயன உரத்தை பயன்படுத்துவதா? என்ற நிலைமைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

சேதனப் பசளை திட்டம் சிறந்தது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

இருப்பினும் அத் திட்டத்தை முறையாக செயற்படுத்த உரிய வழிமுறைகள் கையாளப்பட வில்லை என அவர் தெரிவித்தார். (நி)

# கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஜனாதிபதி திடீர் விஜயம்



(கொழும்பு)

கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் முற்பகல் திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

அந் தத் திணைக்களத்தின் நோக்கங்கள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா? என்பதைக் கண்டறிவதே ஜனாதிபதியின் கண்காணிப்பு விஜயத்தின் நோக்கமாகும். (நி)

# ஆட்சியைத் தக்க வைக்கவே ஆலயங்களில் குண்டு வைக்கின்றனர்

## எதிர்க்கட்சி சாடல்

(கொழும்பு)

ஆட்சியை தக்க வைப்பதற்காக ஆலயங்களில் குண்டை வைக்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் வேலைத் திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி புத்தகங்களை அச்சிடுகின்றார். ஜனாதிபதி செயலாளராக இருந்த பீ.பி.ஜயசுந்தர இந்த நாட்டின் எதிர்காலத்தை இறைவனே பார்க்க வேண்டும் என்று கூறிவிட்டு பதவியில் இருந்து விலகிச் சென்றுள்ளார்.

ஆட்சிக்கு வரும்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குற்றவாளிகள் மற்றும் மத்திய வங்கி திருடர்களை கைது செய்வோம் என்று கூறினர். ஆனால் இப்போது கால அவகாசம் கேட்கின்றனர்.

இதேவேளை நாட்டில் இனவாதத்தை தூண்டுவதற்கும், இந்த அரசாங்கத்தின் இருப்பை தக்க வைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அன்று ஆட்சியைக் கைப்பற்ற குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், இன்று ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள தேவாலயத்தில் குண்டை வைக்கின்றனர். இது திட்டமிட்ட செயல் என அவர் தெரிவித்தார். (நி)

# அதலபாதாளத்திற்கு சென்ற நாட்டை மீட்டவர் ஜனாதிபதி கோட்டா

## மகா சங்கத்தினர் புகழாரம்



(கொழும்பு)

பொறுமையுடனும் நன்கு திட்டமிடப்பட்ட வகையிலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரதிபலன்கள் தற்போது யதார்த்தமாகி வருகின்றன.

தொலைநோக்குப் பார்வையும் நடைமுறைச் சிந்தனையும் கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது நம்பிக்கை வைத்து, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற ஒன்றிணைவது அனைத்துத் தரப்பினரினதும் பொறுப்பு என மகா சங்கத்தினர் சுட்டிக் காட்டினர்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பௌத்த ஆலோசனை சபையின் 12ஆவது கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதலபாதாளத்துக்கு சென்று கொண்டிருந்த நாட்டையும் தேசத்தையும், பாரம்பரியத்தையும் காப்பாற்றக்கூடிய ஒரே தலைவர் என்ற வகையில் கோட்டாபய ராஜபக்ஷ மீது வைத்திருந்த நம்பிக்கை வீணாகவில்லை எனவும், அதேபோன்று, நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான உண்மைத் தகவல்களை வழங்குவதும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவதும், பௌத்த ஆலோசனைச் சபையின் பொறுப்பாகும் என்றும் மகா சங்கத்தினர் குறிப்பிட்டனர். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 520 | 330 | 600 |
| உருளைக்கிழங்கு | 150 | 160 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 450 | 400 |
| தக்காளி | 180 | 120 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 70 | 50 |
| கோவா | 260 | 200 | 230 | 250 |
| கரட் | 320 | 420 | 430 | 480 |
| பூசணி | 120 | 130 | 130 | 180 |
| புடோல் | 240 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 230 | 280 | 100-250 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 200 | 240 |
| பாகற்காய் | 340 | 300 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 320 | 240 | 150 | 360 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 450 | 300 | 350 | 500 |
| லீக்ஸ் | 340 | 220 | 230 | 300 |
| பீற்றூட் | 300 | 350 | — | 400 |
| கறிமிளகாய் | 600 | 500 | -- | 800 |
| முருங்கைக்காய் | 1200 | — | 1200 | 800 |
| போஞ்சி | 300 | 400 | 300 | 550 |
| கத்தரிதம்புள்ள | 420 | 350 | — | 550 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 100 | 80 |
| தேசிக்காய் | 180 | 200 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-90 | 75-100 |
| இராசவள்ளி | 200 | 280 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 280 | 320 |
| முள்ளங்கி | 160 | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 25 | 25 | 40 | 40 |
| ஈரப்பலா | 120 | 100 | 80 | 140 |

# புன்னாலைக்கட்டுவனில் ஒருவருக்கு டெங்கு



(குப்பிழான்)

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட புன்னாலைக்கட்டுவன் தெற்கு கப்பம்புலம் பகுதியைச் சேர்ந்த 32 வயது இளைஞர் ஒருவருக்கு அண்மையில் டெங்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த இளைஞர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுப் பின் வீடு திரும்பியுள்ளார். (4-6-18)

# பிரதமரின் பாராளுமன்ற விவகாரங்களுக்கான செயலாளர் பதவி நீக்கம்?

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பாராளுமன்ற விவகார செயலாளராக கடமையாற்றும் உதித் லொக்கு பண்டாரவை பதவி நீக்கம் செய்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. நிதி மோசடியில் ஈடுபட்டமை தெரியவந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுலியஸ் சீசர் போல ரோமப் பேரரசராக உயர வேண்டுமா? அல்லது உங்களுக்குள்ளேயே சிறைப்பட்ட ஒரு பறவை யாக வாழ வேண்டுமா? என்பது உங்களின் துணிச்சலைப் பொறுத்தே அமையும். – சேர் டி. ப்ரௌன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரிட்டிஷ் தூதுவருடனான சந்திப்பில் நம்மவர்கள் ஒருமுகப்படாதது ஏன்?

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு தமது நிலைப் பாட்டை தெளிவுபடுத்தி இந்தியப் பிரதமருக்குக் கடிதமொன்றை வரைந்துள்ளனர்.

பிரதமர் மோடிக்கான கடிதத்தை இந்தியத் தூதுவரிடம் தமிழ்க் கட்சிகள் ஒருமுகப்பட்டுக் கையளித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கடிதத்தை இந்தியத் தூது வரிடம் கையளித்தார்.

அதன்போது இதர தமிழ்க் கட்சித் தலை வர்கள் உடனிருந்தனர்.

ஒருசில தமிழ்க் கட்சிகள் மேற்படி கடிதத் துக்கு தமது ஆதரவைத் தெரிவிக்கவில்லை.

இது ஒரு யதார்த்தமான விடயமே. இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு நிலைப்பாட்டில் இருப்பர். இது தவிர்க்க முடியாதது.

தமிழீழம்தான் தமிழர்களுக்கான ஒரே தீர்வு என்று ஒருதரப்புக் கூறும். இன்னொரு தரப்போ இலங்கை முழுவதையும் தந்தால் தான் தகும் என்று கருதும். இஃது அவரவர் கட்சிக் கொள்கை சார்ந்தது.

ஆனால் இங்கு நாம் பார்க்க வேண்டிய தெல்லாம் யதார்த்தத்துக்குப் பொருந்தக் கூடியதாக – வெளிநாடுகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக – ஒரு பெரும் இலக்கை நோக்கிய பயணத்தில் தங்கவும் தரித்து நிற்கவும் களைப்பாற எங்களை வலிமைப்படுத்திக் கொள்ளவும் நடந்து முடிந்த போர் வடுக் களில் இருந்து எங்கள் இனத்தை ஆற்றுப் படுத்தவும் கூடியதாக அரசியல் வியூகத்தை அமைப்பதுதான் இன்றைய கட்டாயத் தேவை.

அதிலும் அண்டைநாடான இந்தியா உட்பட வெளிநாடுகளிடம் எமக்கான அரசியல் தீர்வை பெற்றுத் தாருங்கள் என்று கேட்கும் போது, அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபட்டு ஒருமுகமாகக் கேட்பது எங்களின் ஒற்றுமைப்பலத்தைக் காட்டி நிற்கும்.

இவ்வாறு தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றுபட்டு கேட்கும்போது, அதற்கான கனதி காத்திரம் உயர்வாக இருக்கும்.

இந்த அடிப்படையில், இந்தியப் பிரதமருக் கான கடிதத்தை ஒருமுகமாகத் தயாரித்து அதில் கையொப்பமிட்டு அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தியத் தூதுவரிடம் கையளித்துள் ளமை வரவேற்கப்பட வேண்டிய விடயம். தமிழர் வரலாற்றில் இஃது ஒரு புதிய திருப்பு முனை எனலாம்.

ஆனால் பிரிட்டிஷ் தூதுவருடனான சந்திப் பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதா வது இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டுமே சந்தித்தது.

இங்குதான் ஒரு கேள்வி எழுகிறது. அதா வது தமிழரசுக் கட்சியை மட்டும் சந்திக்கப் போவதாகப் பிரிட்டிஷ் தூதுவர் கேட்டுக் கொண் டாரா? அல்லது நாங்கள் ஒன்றுபட்டுள்ளோம். எனவே இந்தச் சந்திப்பில் நாங்கள் ஒருமுக மாகச் சந்திக்க வேண்டும் என்று சம்பந்தர் கூற மறந்தாரா? என்பதுதான் புரியவில்லை.

எதுஎவ்வாறாயினும் இனிவருங்காலங் களிலேனும் வெளிநாட்டுத் தூதுவர்கள், வெளி நாட்டுத் தலைவர்களுடனான சந்திப்பின் போது பிரதமர் மோடிக்கு அனுப்பிய கடிதத்தில் கையெழுத்திட்ட தமிழ் அரசியல் தலைவர்கள் கலந்துகொள்ள வேண்டும்.

அப்போதுதான் எங்கள் தொடர்பில் ஓர் உறுதியான செய்தி வெளிநாடுகளுக்குச் சொல் லப்படும்.

ஆம், தமிழ்த் தரப்பின் ஒற்றுமை விடயத் தில் வெளிநாடுகளும் கவனம் செலுத்தி ஒற்று மையை உடைக்காமல் ஊக்குவிக்க வேண்டும்.

# நட்பு நாடுகள் உதவி வருகின்றன
# நாடு வங்குரோத்து விளிம்பில் இல்லை
## வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ்

(கொழும்பு)

தேவைப்படும் நேரத் தில் நட்பு நாடுகள் இலங் கைக்கு உதவி வருகின் றன. எனவே நாடு வங்கு ரோத்து விளிம்பில் இல்லை என வெளிவிவ கார அமைச்சர் பேராசிரி யர் ஜி.எல்.பீரிஸ் தெரி வித்துள்ளார்.

நேற்று கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக் கையில்,

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச இந்திய வெளி விவகார அமைச்சருடன் கலந்துரையாடியதன் பின்னர் 1.5 பில்லியன் அமெரிக்க டொலரை இந்தியாவிடமிருந்து பெற் றுள்ளதாக அவர் தெரி வித்தார்.

தேவையான உண வுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் சீமெந்து ஆகியவற்றைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் 1 பில்லியன் அமெரிக்க டொலரையும் எரிபொருள் கொள்வனவு செய்ய 500 மில்லியன் அமெரிக்க டொலரையும் நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரிக்க 400 மில்லியன் அமெ ரிக்க டொலரையும் பெற் றுள்ளதாக அவர் தெரி வித்தார்.

கண்டி, கெட்டம்பே யில் மேம்பாலம் அமைப் பதற்கு ஹங்கேரி அரசாங் கம் பணம் வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

இதேவேளை சீனா வும் 1 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசியை வழங்க உறுதியளித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித் தார்.

இதற்கு மேலதிகமாக சர்வதேச நாணய நிதி யத்தின் ஒத்துழைப்பை யும் அரசாங்கம் பெற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் பொது வாக்கெடுப்பு நடத்துவதில் கவனம் செலுத்தவில் லை மாறாக அடுத்த மூன்று வருடங்களில் தனது வேலைத் திட் டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது என மேலும் தெரிவித்துள் ளார். (ம)

## வவுனியா தோணிக்கல்லில் எரிவாயு அடுப்பு வெடித்தது

(வவுனியா)

வவுனியா தோணிக் கல் திருவள்ளுவர் வீதி யில் அமைந்துள்ள வீடு ஒன்றில்தேநீருக்காக தண் ணீர் வைத்துக் கொண் டிருந்த சமயத்தில் எரி வாயு அடுப்பு வெடித்துள் ளதாக வவுனியா பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியிலுள்ள வீடு ஒன்றில் முதியவர் ஒருவர் தேநீருக்காக தண்ணீர் வைத்துக் கொண்டிருந்தபோது எரிவாயு அடுப்பு வெடித் துள்ளது.

இதனையடுத்து வீட் டார் எரிவாயு சிலிண் டரை பாதுகாப்பாக அகற்றி மேலதிக அனர்த்தம் ஏற்படுவதை தடுத்துள் ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் தடய வியல் பொலிஸாரின் உதவியுடன் இது தொடர் பான விசாரணைகளை மேற்கொண்டனர். (ம)

## மீசாலையில் தாக்குதல்; இளைஞன் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை கிழக்குப் பகுதியில் நேற்று சனிக்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந் துள்ளார்.

கார் ஒன்றில் வாள் கள், இரும்புக் கம்பிக ளுடன் வந்த மூவர் கொண்ட குழுவே அப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் நின்ற இளை ஞன் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்துச் சென்றுள்ளது.

இதில் மீசாலை கிழ க்கு மீசாலைப் பகுதியைச் சேர்ந்த காப்புறுதி நிறு வனம் ஒன்றில் பணி யாற்றும் 24வயதான இளைஞன் படுகாயமடை ந்த நிலையில் சாவகச் சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவ கச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின் றனர். (ம-30)

## கொக்காவிலில் ஹயஸ் வாகனம் விபத்து
### ஒருவர் படுகாயம்

(வவுனியா)


வவுனியாவில் இரு ந்து யாழ்ப்பாணம் நோக் கிச் சென்ற ஹயஸ் வாக னம் கொக்காவில் பகுதி யில் விபத்துக்குள்ளாகிய தில் ஒருவர் படுகாயம டைந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இரு ந்து யாழ்ப்பாணம் நோக் கிச் சென்ற ஹயஸ் வாக னம் ஒன்று கொக்காவில் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகி யது. குறித்த விபத்தில் ஒருவர் படுகாயமடைந் துள்ளார்.

விபத்து குறித்து மாங் குளம் பொலிஸார் மேல திக விசாரணைகளை முன்னெடுத்து வருகின் றனர். (ம-250)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத் திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்.
என் தந்தை என் மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளேன்.

❖ தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை.

❖ நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள் அப்போது உலகம் மகிழும். நீங்கள் துயருறுவீர்கள்.ஆனால், உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்.

❖ "எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல. அது இவ்வுலக ஆட்சி போன்றதாய் இருந்திருந்தால் நான் யூதர்களிடம் காட்டிக் கொடுக்கப்படாத வாறு என் காவலர்கள் போராடியிருப்பார்கள். ஆனால், என் ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல"

❖ உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன் இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்"

❖ "மேலிருந்து அருளப்படாவிடில் உமக்கு என் மேல் எந்த அதிகாரமும் இராது. ஆகவே, என்னை உம்மிடம் ஒப்புவித்தவன்தான் பெரும் பாவம் செய்தவன்"

❖ "மேலிருந்து அருளப்படாவிடில் உமக்கு என் மேல் எந்த அதிகாரமும் இராது. ஆகவே, என்னை உம்மிடம் ஒப்புவித்தவன்தான் பெரும் பாவம் செய்தவன்"

❖ "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!"

❖ "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி இராசம்மா பொன்னுச்சாமி

யாழ். சாவகச்சேரி மீசாலை சப்பச்சிமாவடியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, முழங்காவில் பல்லவராயன் கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா பொன்னுச்சாமி அவர்கள் நேற்று முன்தினம் (21.01.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான கதிரவேலு - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுச்சாமி அவர்களின் ஆருயிர் மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்லதுரை, இராசம்மா, பாலச்சந்திரன் மற்றும் பரஞ்சோதி (அவுஸ்திரேலியா), இரத்தினம் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சுகந்தி (கொலண்ட்), வசந்தி (இளைப்பாறிய உபஅதிபர் - இலங்கை), சிறிதர் (லண்டன்), ஜெயந்தி (அதிபர் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்-இலங்கை), கலாநிதி மனோகர் (பீடாதிபதி - அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சாந்தி (தாதி-முழங்காவில் வைத்தியசாலை, இலங்கை), முருகதாஸ் (பிரான்ஸ்), சிவானந்தி (அதிபர்-ஜெயபுரம் மகா வித்தியாலயம்), ஆனந்தி (லண்டன்), வைத்தியகலாநிதி சிறிசங்கர் (வைத்தியர் - மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை), தமயந்தி (ஆசிரியை - முழங்காவில் ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலேந்திரன் (கொலண்ட்), நாகராசா (இலங்கை), கிருபாலினி (லண்டன்), தனபாலசிங்கம் (இலங்கை), பாலசதாமணி (அவுஸ்திரேலியா), கதிரவேலுபிள்ளை (இலங்கை), கல்பனா (பிரான்ஸ்), பரதன் (அதிபர் - நாச்சிக்குடா அ.மு.க பாடசாலை), விஜயராசா (லண்டன்), அனுசா (வைத்திய அதிகாரி - கிழக்கு மாகாண பயிற்சி நிலையம்), சந்திரகுமார் (ஆசிரியர் - கிளி / கிராஞ்சி அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவராகா (இலங்கை), துவராகா (சுவிஸ்), லதுசன், அனோஜன், அஜித்தா (லண்டன்), புருசோத் (இலங்கை), அனுயா, நிதுர்சன் (அவுஸ்திரேலியா), விஸ்ணுகாந் (இலங்கை), கேமகாந் (லண்டன்), விமலாகாந் (இலங்கை), அட்சயா, அஸ்விதா, ஆர்தியா (பிரான்ஸ்), கிதுசன், டிந்துசன், திகல்யா (இலங்கை), அபிநயா, ஜெய்சால் (லண்டன்), அருனோதன், சோபிரா, அகலவன், குஜிதன் (இலங்கை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அகரன் (இலங்கை) அவர்களின் அன்புப் பூட்டியும் கிரிதரன் (இலங்கை), அனுதரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முழங்காவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிகானு வீதி,
முழங்காவில்.

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## என்னை...

இல்லையெனவும் முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தன்னை சிறைப்படுத்தப்போவதாக வெளியாகும் தகவல்கள் பொய்யானவை எனவும் தவறான தகவல்கள் பரவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஶ்ரீலங்காவின் முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை கைது செய்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அரசியல் வட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம)

## 12 - மரணம்...

துள்ளனர்.

இதன் அடிப்படையில் கொரோனாவால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15, 284 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கொரோனாத் தொற்று உறுதியான 845 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 601,048 ஆக அதிகரித்துள்ளது. (ம)



















## இலங்கையில்...

வித்துள்ளார்.

இதன்படி, இலங்கையில் ஒமிக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு, ஒவ்வாமை மற்றும் மூலக்கூறு பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற 180 மாதிரிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் ஊடாகவே, இந்த 75 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ம)

## பாராளுமன்ற...

ட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் இவ்வாறு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதேவேளை ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்தவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத்வீரசேகரவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சிங்கள...

நடவடிக்கைகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்" என தெரிவித்தனர்.

அதேபோன்று, நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான உண்மைத் தகவல்களை வழங்குவதும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில் எமக்குத் தாம் ஒத்துழைப்பு வழங்குவதும், பௌத்த ஆலோசனைச் சபையின் பொறுப்பாகும் என்றும் மகா சங்கத்தினர் குறிப்பிட்டனர்.

"அழியும் தருவாயில் இருந்த சிங்கள பௌத்த பாரம்பரியத்தை கோவிட் தடைகளுக்கு மத்தியிலும் பாதுகாத்து, பெரும்பான்மை மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றபட்டதைப் போன்று - அந்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் தலங்களை அபிவிருத்தி செய்வதற்கும் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என மகா சங்கத்தினரிடம் ஜனாதிபதி கோட்டா தெரிவித்தார். (ம)

(மேலும் ஒரு செய்தி உள்ளே)

## வயிற்றை...

ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் இயங்கும் ஐக்கிய இளைஞர் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடு கேகாலை மாவட்டத்தில் எதிர்க்கட்சி தலைவர் தலைமையில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இங்கு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

பங்காளிகளை பாதுகாப்பதற்கு பதிலாக மக்களை பாதுகாப்பதே எமது அரசியல் என்றும் பங்காளிகளை பாதுகாக்கும் அரசியலன்றி நாட்டின் அனைத்து மக்களையும் பாதுகாக்கும் அரசியல் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

18 இலட்சம் வரையான நெற் பயிர் செய்கையாளர்களையும் பெருந்தோட்ட பயிர் செய்கையாளர்களையும் அரசாங்கம் பாதாளத்திற்கு தள்ளியுள்ளதாகவும் தற்போது உரம், சமையல் எரிவாயு, சீனி மற்றும் அரிசி போன்றவை மாத்திரமின்றி முழு அரசாங்கமும் தரமற்றதாக காணப்படுகின்றது.

தமது வயிற்றையும் பொக்கெட்டுகளையும் நிரப்புவதற்காக அப்பாவி மக்களின் பணத்தை கொள்ளையடிக்கும் யுகத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அதுவே எதிர்கால அரசாங்கத்தின் நிலையான கொள்கை.

அன்று ஜே.ஆர்.பிரேமதாச, லலித் மற்றும் காமினி உள்ளிட்ட அரசியல் செயற்திறன்மிக்க ஞானிகள், அதற்கு முன்பு இருந்த தூர நோக்கற்ற ஏழாண்டு கால ஆட்சியின் ஊடாக படுமோசமாக சீரழிக்கப்பட்ட நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக பாரிய புரட்சியை முன்னெடுத்துள்ளனர் என்றார். (ம)

## மனித உரிமைகள்...

மான விடயங்கள் உள்ளடங்கியிருப்பதும் தமக்குப் பெரிதும் விசனமளிப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி மனித உரிமைகள்சார் விடயங்களைப் பொறுத்தமட்டில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச அரச சார்பற்ற கட்டமைப்புக்கள் உள்ளடங்கலாக சர்வதேச சமூகத்துடன் ஒன்றிணைந்து ஆக்கபூர்வமான விதத்தில் செயற்படும் கொள்கையையே அரசாங்கம் பின்பற்றிவருவதாகவும் வெளிவிவகார அமைச்சு விளக்கமளித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் சிறுபான்மையின தமிழ், முஸ்லிம் சமூகங்கள் தொடர்ச்சியாக இலக்குவைக்கப்பட்டு வந்திருப்பதாக கடந்த 2021 ஆம் ஆண்டில் சர்வதேச நாடுகளின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்ட உலக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதுகுறித்து விளக்கமளிக்கும் வகையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## வைரஸ்...

டெங்கு மற்றும் கொரோனாத் தொற்றைப் போன்ற வைரஸ் காய்ச்சல் நாட்டின் பல மாகாணங்களில் பரவி வருவதாக ஔடத ஒழுங்குபடுத்தல் மற்றும் விநியோக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

எனவே, காய்ச்சல் ஏற்படின் கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டாம் என இராஜாங்க அமைச்சர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

## இந்த...

கண்டி அஸ்கிரிய பீடத்திற்கு நேற்று விஜயம் செய்திருந்த அவர், ஊடகங்கள் தொடுத்த கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"புதிய அரசியலமைப்பு உருவாக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றது. முழு அளவில் அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்கான வேலையினை அர்சியலமைப்பு உருவாக்கக் குழு மேற்கொண்டு வருகின்றது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பாராளுமன்றக் குழு அமைக்கப்பட்டுள்ளது.


தேர்தலில் விருப்பு வாக்குமுறையானது மிகவும் ஆபத்தானது. இதனை மாற்றியமைக்க வேண்டும். துஸ்பிரயோகத்துடன் நேரடியாக தொடர்புபட்டது. அதனை மாற்றவேண்டும் என்பதே நாட்டில் உள்ள சகல தரப்பினரதும் விருப்பமாகும்" என்றார். (ம)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் பூனையால் குழம்பிய திருமணம்

யாழ். மானிப்பாய் பகுதியில் ஓரிரு நாட்களில் திருமணம் ஆக விருந்த பிரான்ஸ் மாப்பிள்ளையின் கனவை பூனை ஒன்று குழப்பியுள்ளது.

கடந்த வாரம் பிரான்ஸிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தனது கல்யாணத்திற்காக வந்திருந்த 32 வயதான மாப்பிள்ளை பெண் பார்க்கும் படலம் முடிவடைந்து கல்யாணத்திற்கான ஆயத்த வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மாப்பிள்ளை தங்கியிருந்த வீட்டில் மணமகளின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் வந்து பொன்னுருக்கு நடைபெற இருந்த நேரத்தில் வேட்டியுடன் நின்றிருந்த மாப்பிள்ளையின் காலுக்குள் புகுந்து விளையாடியுள்ளது சிறிய பூனைக் குட்டி ஒன்று. ஒரு கட்டத்தில் வேட்டிக்குள் புகுந்து மாப்பிள்ளையின் காலை விறாண்டியுள்ளது.

இதனால் மிகவும் கோபமடைந்த மாப்பிள்ளை பூனையின் வாலைப் பிடித்து தலைகீழாக நிலத்தில் தூக்கி அடித்துள்ளார். அந்த இடத்திலேயே பூனைக்குட்டி பலியாகியுள்ளது. இதனை நேரில் பார்த்து அதிர்ச்சியடைந்த மணமகள் வீட்டுக்காரர் பொன்னுருக்கையும் விட்டுவிட்டு ஓடித்தப்பியுள்ளதாக தெரிய வருகின்றது. (ம)


விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-3577)
0768226240 DHL

பணிப்பெண் தேவை
தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை.
இடம்: கிளிநொச்சி மற்றும் கொழும்பு
(9782)
077 711 1130

வகுப்பு
தரம் 05 புலமைப்பரிசில் பயிற்சி வகுப்புகள் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.
(9785)
077 863 7210

யாழ்ப்பாணத்தில் படிப்பு & கனடாவில் வேலை
மேலதிக விபரங்களுக்கு (C-3578)
21,22,23 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் சர்வதேச கண்காட்சியில் STALL-C19
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
777-068-777


காணி விற்பனைக்குண்டு
யாழ்ப்பாணம், கைதடி வடக்கில் தபால் நிலையம் அருகாமையில் 120 நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
ஒரு பரப்பின் விலை - 120,000/=
(ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய்)
மற்றும் 90 பரப்பு வயல் காணி விற்பனைக்குண்டு
ஒரு பரப்பின் விலை - 50,000/=
(ஐம்பதாயிரம் ரூபாய்)
(கைதடி சந்தியிலிருந்து 2 Km தூரம்)
077 288 0152, 077 911 6983, 076 405 3965
(9798)

IELTS
A course that can change the course of your life!
Improve your vocabulary | Grammar | Spoken | Accent | Personality etc.
Success Assured! Enroll Now
Contact : 077 880 3887
IELTS - PREPARATION CENTRE
PALALY ROAD - URUMPIRAI
(உரும்பிராய் - பெற்றோல் நிலையத்திற்கு முன்பாக)
(C-3600)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக்கிணற்றடி அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- நிலப்பரப்பு
- 14 அடி பாதையுடன்
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்
பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
(9801)
077 814 7389, 077 614 7333

வேலையாட்கள் தேவை
எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.
♦ தச்சு வேலையாட்கள் ♦ வேலை பழக விரும்புபவர்கள்
♦ தளபாட பெயின்ரர் ♦ வாகன சாரதி
தொடர்ச்சியான வேலையும் தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.
ஆர்க் தளபாட நிலையம்
இல.35, கொட்டைக்காடு ஒழுங்கை, பலாலி வீதி, கோண்டாவில். (பஸ் டிப்போ அருகாமை)
(9751)
077 300 1763 | 021 221 9909


# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை பொன்னையா

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மற்றும் பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பொன்னையா அவர்கள் கடந்த (21.01.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ் சென்றவர்களான இளையதம்பி - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அழகம்மாவின் அன்புக் கணவரும் செல்லத்துரை, காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரேனுகா (பிரான்ஸ்), விஜிதா (அமெரிக்கா), வாகீசன் (ஆசிரியர் - யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நேமிநாதன், பிரதீபன், பிரியதர்சினி (ஆசிரியை - யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுயம்பவன், மானதி, பிரவர்ணா, பிரவிஷ்ணா, பிரகலாதன், துஹிலன், மேகவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.206/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-3604)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 328

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2053 23.01.2022 தொலைபேசி : 021 222 3378

## ஒருமுகமாக திருமுகம் கையளிப்பு



## ஒருமுகப்பட்டதை ஓரங்கட்டிய சந்திப்பு



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## சின்னஞ்சிறுசுகளைக் கசக்கி பிழிந்த பரீட்சை முடிந்தது!

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். கவிஞர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தியறிந்து மிகத் துயரடைகின்றோம். இரசனைக்குரிய கவிஞன் இளம்வயதில் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

மௌன அஞ்சலியைத் தொடர்ந்து ஆலடியில் நிலவிய அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

விதானையார்: யாழ்ப்பாண மாநகர சபை நடத்திய முத்தமிழ் விழா உண்மையில் ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது. முத்தமிழ் விழாவை நடத்துவதற்கு மூலகாரணமாக இருந்த யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் மற்றும் நல்ல பல திட்டங்களை வகுத்து அதனைச் செயலுருப்படுத்தக்கூடிய யாழ். மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன், முத்தமிழ் விழாவுக்கு உறுதுணையாக இருந்த யாழ்.மாநகர சபை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் ஆலடியில பாராட்டுத் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேணும்.

இவ்வாறு விதானையார்கூற, அதனை அனைவரும் வரவேற்றதுடன் முத்தமிழ் விழா நடத்திய அனைவருக்கும் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கங்காணி: யாழ். மாநகர சபை நடத்திய முத்தமிழ் விழாவில தமிழரசுக் கட்சி சார்ந்த மாநகர சபை உறுப்பினர்கள் பங்குபற்றவில்லை எண்டு பலரும் கதைக்கினம்.

மூப்பர்: என்ன செய்யிறது. தலைமை போட்ட உத்தரவை மீறுவது கொஞ்சம் கஷ்டம்தான். ஆனால் தமிழரசுக் கட்சி சார்ந்த யாழ். மாநகர சபை உறுப்பினர்களில் ஒரு பகுதியினருக்கு முத்தமிழ் விழாவில கலந்து கொள்ள வேணும் எண்ட விருப்பம் இருந்ததாம். ஆனாலும் அவைத் தலைமை இட்ட கட்டளையை உதாசீனம் செய்யக்கூடாது எண்ட அடிப்படையில அவர்கள் முத்தமிழ் விழாவில கலந்து கொள்வதைத் தவிர்த்தவியள் எண்டு கேள்வி.

சாத்திரியார்: என்னைப் பொறுத்தவரையில இப்படியான நிகழ்வுகளைப் புறக்கணிப்பதைவிட, பங்குபற்றுவதுதான் மக்களின்ர ஆதரவைப் பெறுவதற்கான ஒரேவழி. ஆனாலும் இந்த நுட்பம் பலருக்குத் தெரியுதில்லை.

சிறாப்பர்: சாத்திரியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. எப்பவும் பொது நிகழ்வுகளில அரசியல் சார்பு பார்க்கக்கூடாது. அப்படி அரசியல் சார்பு பார்த்தால் அதனால ஏற்படுகிற பாதிப்பு தமிழ் மக்களுக்கு அல்லாது வேறு ஒருவருக்குமில்லை.

பண்டிதர்: முத்தமிழ் விழாவில நடந்த வழக்காடு மன்றத்துக்குத் தலைமை நீதிபதியாக இருந்த கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள்; இனிவரும் காலங்களில் முத்தமிழ் விழாவை கோலாகலமாக நடத்தவேணும் எண்டு கோரிக்கை விட்டிருந்தவர். அந்தக் கோரிக்கையை யாழ். மாநகர சபை நிறைவேற்றும் எண்டு நம்புறன்.

இவ்வாறு பண்டிதர் கூறும்போது, சாத்திரியார் சதாசிவம் கையடக்கத் தொலைபேசியில் சிரித்துச் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தார். இதனை அவதானித்த மூப்பர் என்ன இண்டைக்கு சாத்தியார் நல்ல சந்தோசமாக இருக்கிறார். என்ன சங்கதியோ?

விதானையார்: சாத்திரியாற்ற பேரப்பிள்ளையின்ர தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிந்து விட்டதல்லோ. அதுதான் அவர் சந்தோசமாக இருக்கிறார்.

சாத்தியார்: இந்தா அறிஞ்சவன் அறியவேணும் அரியாலைப் பனாட்டு. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக என்ர பேரப்பிள்ளையை எங்கெல்லாம் கூட்டிக்கொண்டு திரிஞ்சன். அங்க ரியூசன். இங்க சூம் வகுப்பு. தொலைவில பேர்சனல் கிளாஸ். இங்கயும் அங்கயும் மொடல் பரீட்சை. இப்படியே அலைஞ்சது மட்டுமல்ல, என்ர பேரப்பிள்ளையும் கசங்கிப் போனான்.

வாத்தியார்: தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எண்ட பேரில எங்கட சின்னஞ்சிறுசுகளை கசக்கிப் பிழிஞ்சு போடுகிறம்.

பூப்போன்ற அந்தச் சின்னச் சிறுசுகளின் மனங்களை; படிபடி எண்டு கசக்கிவிட, அந்தப் பிள்ளைகள் ஐந்தாம் தரத்திற்குப் பிறகு வக்கிர மனத்தோட வளருகினம். அதற்குப் பிறகு பெற்றோரின்ர சொல்லைக்கேட்க அவர்கள் தயாரில்லை.

க.பொ.த. சாதாரண தரத்திற்கு வந்தவுடனேயே பெற்றோரை எதிர்த்துக் கதைக்கினம். தங்கட நண்பர்களோட சேர்ந்து தங்களுக்கென ஒரு தனிப்பாதையை அமைக்கினம். இதுதான் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையால எங்களுக்கு ஏற்பட்ட விளைவு.

சிறாப்பர்: வாத்தியார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. சின்ன வயதில நாங்கள் அவையளின்ர உளம் அறிந்து செயற்படவேணும். இதை விட்டிட்டு படிபடி எண்டு வதைச்சு விட, பின்னாளில தங்கட பெற்றோர் களைப் பராமரிக்காமல் முதியோர் இல்லங்களில கொண்டு போய் விடுகின்ற மனநிலைக்கு அந்தப் பிள்ளையள் வருகினம்.

ஆகையால புலமைப்பரிசில் பரீட்சை எண்டாலும் அன்பு, அரவணைப்போட இயற்கையாகக் கற்கவேணும்.

அதேநேரம் சுய ஆற்றலை, சுய சிந்தனையைத் தூண்டுகிற மாதிரி படிப்பிக்க வேணும். இதைவிட்டிட்டு திருவிழாக்காலக் கடை மாதிரி கோலம் கொள்ளக்கூடாது.

இப்படி சிறாப்பர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ தர்மசங்கடம் ”
# இந்தியாவுக்கா இலங்கைக்கா ?

ஒரு கோவில் கோபுரத்தில் நீலப் புறாக்களும் வெள்ளைப் புறாக்களும் வாழ்ந்து வந்தன. நீலப் புறாக்களுக்கு தாம் மிகுந்த அழகு என்ற நினைப்பு இருந்ததுடன் வெள்ளைப்புறாக்களை உதாசீனம் செய்வதில் கவனம் செலுத்தி வந்தன.

ஒரு நாள் அருகில் இருந்த வயல் வெளியில் நீல, வெள்ளைப் புறாக்கள் நெல் மணிகளை தின்று கொண்டிருந்த போது வேடன் விரித்த வலையில் சிக்கிக் கொண்டன.

வேடன் தம்மை பிடிக்க ஓடி வருவதைக் கண்ட புறாக்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து வேடன் விரித்த வலையுடன் பறக்கத்தொடங்கின.

வேடன் மிகுந்த கவலையுடன் புறாக்களுக்குப் பின் ஓடினான்.

வலையுடன் பறந்து செல்லும் புறாக்களில் நீலப்புறாக்கள் சொன்னது “எமது பலத்தினால் தான் இந்த வலையுடன் நாம் உயிர் தப்பிக்க முடிந்தது” என. அதற்கு வெள்ளைப் புறாக்கள் “இல்லை இல்லை எமது சிறகின் பலம் எவ்வளவு என்பதை நீங்கள் உணரவில்லை” என இவ்வாறு நீல, வெள்ளை நிற புறாக்கள் இவ்வாறு இருவரும் சண்டையிட்டதால் அவை தடுமாறி ஒரு மரத்தில் மாட்டிக் கொண்டன.

வேடன் ஓடிவந்து தனது வலையுடன் புறாக்களையும் பிடித்துச் சென்றான்.

ஒற்றுமையே பலன் தரும் என்பதான கதை இது.

இந்தக் கதை ஈழத் தமிழர் அரசியலுக்கும் மிகப் பொருந்தும்.

ஒன்றுபட்டு நிற்பதன் பலத்தை பிரிந்து நிற்கும் போதே உணர்ந்து கொள்ள முடியும்.

அதை இப்போது தமிழ்த் தரப்புக்கள் நன்கு உணர்ந்திருப்பர்.

தமிழினத்திற்கான தீர்வை முன்மொழியும் வரைபை தமிழ்க் கட்சிகள் இணைந்து தயாரித்து அதை இந்தியப் பிரதமர் மோடியிடம் கையளிப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

இத் தீர்வுத் திட்ட வரைபில் சிறுபான்மைக் கட்சிகளான தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் மலையக, முஸ்லிம் பிரதிநிதிகளை இணைத்து தீர்வுத் திட்டம் தயாரிக்கும் பணி தொடங்கியது.

நீண்ட இழுபறிக்குப் பின்னர் மோடியிடம் கையளிக்கும் வரைபு உறுதிப்படுத்தப்பட்டது.

இருப்பினும் மலையக மக்கள் பிரதிநிதியான மனோகணேசனும் முஸ்லிம் பிரதிநிதிகளும் வரைபில் கையொப்பம் இடாமல் நழுவிக் கொண்டனர்.

இது அவர்களின் சொந்த அரசியல் சுயநலனின் எடுத்துக்காட்டு என பல்தரப்பட்ட விமர்சனங்கள் எழுந்துள்ள இந்நிலையில் அவை தொடர்பில் நாம் இங்கு பிரஸ்தாபித்து பயனில்லை.

தயாரிக்கப்பட்ட வரைபில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும்படியான கோரிக்கை இருந்தமையினால் அதில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கையொப்பம் இடமறுத்திருந்தார்.

அதனையடுத்து குறித்த வரைபின் தலையங்கத்தை இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள விடயத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என மாற்றியமைத்ததனையடுத்து இரா. சம்பந்தன் அவ் வரைபில் கையொப்பமிட்டிருந்தார்.

அனைத்து தமிழ்க் கட்சித் தலைவர்களும் கையொப்பமிட்ட வரைபினை கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியத் தூதுவரிடம் கையளித்தனர்.



இந் நிகழ்வில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான சி.வி. விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ. சுமந்திரன், சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் ரெலோவின் பேச்சாளர் கு.சுரேன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த சந்திப்பானது சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்திப்பில் இந்தியப் பிரதமர் மோடியை சந்திக்க ஏற்பாடு செய்யும்படி கூட்டமைப்பினால் இந்தியத் தூதுவரிடம் கோரிக்கை விடப்பட்டது.

இதற்குப் பதிலளித்த இந்தியத்தூதுவர் தற்போதைய கொரோனா நிலைமை சுமுகமாகியதும் சந்திப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக உறுதியளித்துள்ளார்.

ஆனால் ஏலவே கடந்த டிசெம்பர் மாதம் இந்தியப் பிரதமரைச் சந்திக்கும் அழைப்பு கூட்டமைப்பிற்கு வந்தபோதிலும் அதனைச் சாதகமாக கையாளாமல் தவிர்த்த கூட்டமைப்பு அதற்கு உப்புச்சப்பில்லாத பல காரணங்களைக் கூறியிருந்தது.

இந் நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்திய தூதுவருடனான சந்திப்பில் இரா.சம்பந்தன், கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியாவில் நின்றதாகவும் அவர் இந்தியாப் பிரதமரை சந்திக்க முயற்சி எடுத்து தோல்வி கண்டதாகவும் தாம் (கூட்டமைப்பு) இந்தியப் பிரதமரைச் சந்தித்திருந்தால் அது இந்தியாவுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியிருக்கும் என்றும் கூறியிருந்தார்.

பசிலை சந்திக்காமல் கூட்டமைப்பிற்கு இந்தியாவே அழைப்பு விடுத்திருந்த போதும் இவர்கள் இதைக் காரணமாகக் கூறுவது எதற்காக என்ற கேள்வி இங்கு எழும். இங்கு தான் “தர்ம சங்கடம்” என்ற பதம் எழுந்து நிற்கிறது.

தர்மசங்கடம் இந்தியாவுக்கா, இலங்கைக்காக என்ற கேள்வியில்; தம்மை சந்திக்கத் தவறிய இந்திய பிரதமரை நீங்கள் ஏன் சந்தித்தீர்கள் என இலங்கை ஆட்சியாளர்கள் தம்முடன் கோபித்துக் கொள்வார்கள் என்ற தர்மசங்கடமாகக் கூட இருக்கலாம்.

ஆக, அழைத்த போது ஓடிச் சென்று ஐயா எங்களுக்கு தீர்வு தாருங்கள், 13 ஐ முழுமையாய் அமுல்படுத்தப் பணியுங்கள், அதற்கும் அப்பால் சென்று அதிகாரங்களை வழங்குங்கள், நிதி அமைச்சர் இங்கு தான் நிற்கின்றார். அவரை உடன் அழைத்து இதை இறுக்கமாகக் கூறிவிடுங்கள் என இந்தியாவிடம் கோரிக்கை விடாமல் தர்மசங்கடக் கதை கதைத்துவிட்டு இப்போது சந்திக்க நேரம் கேட்பது எவ்விதத்திலும் இராஜதந்திரமாக அமையாது.

தீர்வுத் திட்ட வரைபு கையளித்தாகிவிட்டது. அதை முழுமையாக வாசித்து அதன் சாதக பாதக நிலைகளை நிலைநிறுத்தி அடுத்தகட்ட நடவடிக்கை எவ்வாறு எடுப்பது என்பதைத் தீர்மானிக்க இந்திய அரசிற்கு காலம் எடுக்கும். அந்தக் காலக் கடத்தியை வழங்கியவர்கள் கூட்டமைப்பினர் என்பதற்கு மறு கருத்துக் கிடையாது.

தமிழினத்திற்கான தீர்வுத் திட்ட வரைபினூடே ஒன்றுபட்டவர்கள் தொடர்ந்தும் ஒற்றுமையாய் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். இந்த ஒற்றுமையையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

அதைவிடுத்து நீலப் புறா- வெள்ளைப்புறா போன்று அதிகாரப் போட்டி வருமாக இருந்தால் வலையுடன் வேடனிடம் சிக்க வேண்டிய நிலைவரும்.

> “ **நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்திக்காமல் கூட்டமைப்பைச் சந்தித்தால் அது இந்தியாவுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் என்றே இந்தியப் பிரதமரைச் சந்திக்கவில்லை** ”
>
> **- இரா.சம்பந்தன் -**

அபிமன்யு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## குரங்கும் பூக்களும்

ஒரு நாட்டில் மந்திரி பதவி காலியாக இருந்தது. அதற்கு ஆட்களை தேர்வு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பலரை கழித்துக்கட்டியபின் இறுதியாக மூன்று பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதிலிருந்து ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும். அது கஷ்டமான பணியாக இருந்தது.

முடிவெடுக்க முடியாமல் தவித்த அரசர், இறுதியில் ஒரு சாதுவை அழைத்தார்.

"சாதுவே! இந்த மூவரில் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும். மிகவும் குழப்பமாக இருக்கிறது.

நீங்கள்தான் ஒருவரை மந்திரியாக தேர்ந்தெடுக்க வேண்டும்" என்றார் அரசர்.

"சரி, இவர்களுக்கு ஒரு போட்டி வைக்கிறேன். அதில் யார் வெற்றி பெறுகிறார்களோ, அவர்களுக்கு மந்திரி பதவி அளிக்கலாம்" என்றார் சாது.

அங்கிருந்தவர்களை அரண்மனை நந்தவனத்துக்கு அழைத்துச் சென்றார் சாது.

இந்தப் பூந் தோட்டத்தில் இருக்கும் பூக்களை பறிக்க வேண்டும் இதுதான் போட்டி. ஒரு மணி நேரத்தில் யார் அதிக பூக்களை பறிக்கிறார்களோ அவர்களுக்கே மந்திரி பதவி"



என்றார் சாது.

அரசன் மட்டுமல்ல. அங்கு கூடியிருந்த அனைவரும் சிரித்தனர்.

"மந்திரி வேலைக்கும் பூப்பறிப்பதற்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார் அரசர்.

'அவசரம் வேண்டாம் அரசே. ஒரு நிபந்தனை இருக்கிறது.

இந்த மூவருடனும் ஒரு குரங்கு அனுப்பி வைக்கப்படும். திரும்பி வரும்போது பூக்களோடு, குரங்கையும் பத்திரமாக ஒப்படைக்க வேண்டும்" என்றார் சாது.

அரசர் ஏற்றுக் கொண்டார். மூவருடனும் ஒரு குரங்கு அனுப்பப் பட்டது. குரங்குடன் அவர்கள் நந்தவனத்துக்குள் நுழைந்தார்கள்.


நந்தவனத்தில் போட்டிக்கு சம்பந்தமில்லாத ஒருவன் ஏற்கனவே பூப் பறித்துக் கொண் டிருந்தான்.

அவனிடமும் ஒரு குரங்கு இருந்தது. அவன் தன்னுடைய வேட்டியால் குரங்கை தன் முதுகில் கட்டியிருந்தான்.

அரசர் கொடியசைக்க, போட்டி தொடங்கியது.

ஒரு மணி நேரத்துக்குப் பின் போட்டி முடிந்தது. மூவரும் பூக்களையும், குரங்கையும் சாதுவிடம் ஒப்படைத்தார்கள். (தொடரும்)

# மகாபாரதம்



312

ஒரு சமயம் விஸ்வாமித்திரரும், கண்வரும் நாரதரும் துவாரகைக்கு வந்தனர். விருந்தினராக வந்த அந்த முனிவர்களைப் பக்திபூர்வமாக வரவேற்று உபசரித்திருக்க வேண்டும். ஆனால் ஆணவம் தலைக்கேறிய விருஷ்ணிகள் அலட்சியமாக அம் முனிவர்களிடம் நடந்து கொண்டனர்.

கேலியும், கிண்டலுமாய் அவர்களிடம் பேசினர். ஒரு ஆடவனுக்கு அழகிய வேடமிட்டு, அம் முனிவர்களிடம் அழைத்துச்சென்று "இவளுக்கு ஆண் குழந்தை பிறக்குமா? பெண் குழந்தை பிறக்குமா?" எனக் கேட்டு நகைத்தனர்.

கந்தல் துணிகளையும் இரும்புத் துண்டுகளையும் சேர்த்து மூட்டையாக வயிற்றில் கட்டிக் கர்ப்பிணிப் பெண்ணாக காட்சி அளித்த ஆடவனைக்கண்ட அவர்கள் சினம் கொண்டனர்.

"இவன் ஒரு இரும்பு உலக்கையைப் பெற்றெடுப்பான். அந்த உலக்கையால் கண்ணனும், பலராமனும் தவிர விருஷ்ணி குலம் முழுதும் நாசம் அடையும்"" எனச் சாபம் இட்டனர்.

முனிவர்களின் சாபத்தைக் கேட்ட விருஷ்ணிகள் பயந்து ஓடோடிச் சென்று பலராமனிடமும், கண்ணனிடமும் நடந்ததை கூறினர்.

இரும்புத்துண்டை நன்றாகத் தூள் தூளாக்கிக் கடலில் போடுமாறு பலராமன் அவர்களுக்கு ஆலோசனைக் கூறினார். விருஷ்ணி இளைஞர்களும் அப்படியே செய்தனர். தங்களுக்கு நேர இருந்த ஆபத்து நீங்கியதாக நினைத்தனர். ஆனால் கண்ணனின் மனநிலை வேறாக இருந்தது.

முன்னொரு சமயம் மக்களை பறி கொடுத்த காந்தாரி தமக்கு இட்ட சாபத்தை நினைத் தார். "நீ நினைத்திருந்தால் குருகுல நாசத்தைத் தடுத்திருக்கலாம். ஆனால் நீ அவ்வாறு செய்யவில்லை.

எனவே குருவம்சம் அழிந்தது போல உன் விருஷ்ணி வம்சமும் அழியட்டும்" என்று அவள் இட்ட சாபத்தை எண்ணி தமது விருஷ்ணி வம்சமும் அழியும்காலம்வந்து விட்டதை உணர்ந்தார்.

கண்ணன் வர இருக்கும் ஆபத்தை மாற்ற விரும்பவில்லை. காலத்தின் இயல்பு அது. விருஷ்ணிகளின் ஒழுக்கக் கேடு வரம்பு மீறிச் சென்றது. ஆணவமும், ஆடம்பரமும் அளவு கடந்து சென்றன. பலராமனையும், கண்ணனையும் தவிர மற்ற எல்லோரையும் அவர்கள் அவமானப்படுத்தினர்.

ஐம்புல இன்பங்களில் எல்லை மீறிச் சென்றனர். குறிப்பாகக் காமக் களியாட்டத்தில் பெரிதும் ஈடுபட்டனர். கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் துரோகம் செய்தனர்.

சாபம்பலிக்கும்காலம் வந்து விட்டது. கடலுக்குள் போடப்பட்ட இரும்புத் தூள்கள் கரையோரத்தில் ஒதுங்கி நாணல்களாக வளர்ந்திருந்தன.

குடித்து விட்டுக் கேளிக்கைகளில் ஈடுபட்ட விருஷ்ணிகள் அக் குடிவெறியில் ஒருவரோடு ஒருவர் சர்ச்சையில் ஈடுபட்டனர். ஒருவரை ஒருவர் அடிக்கத் தொடங்கினர்.

கடற்கரையில் வளர்ந்திருந்த நாணல்கள் அனைத்தும் முனிவர்கள் இட்ட சாபத்தால் உலக்கைகளாக மாறியிருந்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தமிழருக்கு அரசியல் தீர்வு பெற்றுத் தர வேண்டிய பொறுப்பு இலங்கை அரசிற்கா, இந்தியாவுக்கா உண்டு?

**தருஷ் — யாழ்ப்பாணம்**

**உங்கள் ஒரு வேளை சோற்றை தியாகம் செய்ய முடியுமா உங்களால்?**

சோறு இருக்கும் போது தியாகம் செய்து பழகினால் இல்லாத போது பட்டினி இருப்பது சுலபமாகிவிடும்.
ஆனாலும் மனம் வரவில்லையே.
ஓடி ஓடி உழைப்பதும் பணம் சேர்ப்பதும் சொத்தின் மேல் சொத்துக் குவிப்பதும் எதற்காக என்ற தேடலை மேற்கொண்டால் அதன் முடிவு சோறு ஆகத்தான் இருக்கும். இந்த தத்துவத்தைப் புரியாதவர் உழைத்து முடித்து உட்கார்ந்து சீனி போடாமல் தேநீரும் சோறு கொஞ்சமும் இலக்கறி நிறையவும் சாப்பிட வேண்டி வரும்.

**திருவாசகம் — யாழ்ப்பாணம்**

**நான் வறுமைப்பட்டவர்களுக்கு உதவி செய்ய எண்ணி இருக்கிறேன். அதை எப்படி செய்வது சொல்லுங்கள் என்று தம்பட்டம் அடிப்பவர்கள் பற்றி?**

ஆமை ஆயிரம் முட்டைகளை அசால்டாக இட்டு விட்டு கடலுக்குள் சென்று விடுமாம். ஆனால் கோழி ஒரு முட்டையை இட்டு விட்டு கொக்கரக்கோ கொக்கரக்கோ என்று ஊரையே கூப்பிடுமாம்.
இந்த இரண்டில் இப்பேர்ப்பட்டவர்கள் கோழி ரகம்.
இவர்களுக்கு தங்கள் செயல் ஏதோ உலகின் உன்னத செயல் என்ற எண்ணம்.
ஆனால் கொடை என்பதன் அர்த்தம் என்ன தெரியுமா?
உள்ளங்கையால் கொடுப்பது புறங்கைக்குத் தெரியக்கூடாது என்பதே. இதைப் புரியாதவரை இவை புதிதல்ல..

**சிவன் — வடமராட்சி**

**இலங்கையின் பொருளாதார நிலை எப்படிப் போகப் போகிறது மாமா?**

நிலை மிக மோசம். இலங்கை சீனாவுடன் ஒட்டுகிறது அல்லவா? சீனாவின் உணவு முறையைப் பின்பற்ற வெகு காலம் எடுக்காது போல.
புரியவில்லையா. இனி எம்மூர் சந்தைகளில் நாய், பூனை இறைச்சி, பதப்படுத்தப்பட்ட பாம்பு ரோஸ்ட், கொடுக்கன், நட்டுவக்காலி, தேள், கரப்பான்பூச்சி இன்னோரன்ன அனைத்தும் விற்கப்படும்.
உணவுத் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம் இருக்காது. வீதி ஓரங்களில் திரியும் அனைத்தும் உணவாகும். பிறகென்ன இதுதான் வளர்ச்சியின் உச்சம் ஆச்சே.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**தர்ஷா — மானிப்பாய்**

**வாழ்வில் முன்னேற ஏதாவது ஒரு நல்ல விடயத்தைக் கூறுங்கள் பார்ப்போம்?**

அண்மையில் ஒருவரை சந்தித்தேன். பார்ப்பதற்கு மிகவும் எளிமையாக இருந்தார். மிகவும் பணிவாகப் பேசினார்.
தான் ஏதோ வர்த்தகத்தில் ஈடுபட்டு நட்டமடைந்து விட்டதாகக் கூறினார். அப்போது அவர் கூறிய ஒரு விடயம் என் மனதில் ஆழமாய்ப் பதிந்தது.
அதை உங்களு க்காகக் கூறுகின்றேன். வர்த்தக நாமத்தில் உறவினரையும் கறையானையும் நம்பக் கூடாது. இவை இரண்டும் ஒன்றே.
இரண்டும் உள்ளே இருந்து அரித்துக் கொண்டிருக்கும். ஆராய்ந்து பார்க்கும் போது தான் அரிழுத்தது புரியும் என்றார்.

**மதுவன் — மீசாலை**

**கணவன் மீது பாசம் போல நடிக்கும் மனைவி பற்றிக் கூறுங்களேன் வியாசரே?**

தனது நண்பன் தலையில் கட்டுடன் வருவதைக் கண்டவர் என்னடா தலையில் காயம் என்றார்.
இனிமேல் என்னை அடிக்க மாட்டேன் என மனைவி தலையில் அடித்து சத்தியம் செய்தாள். அதனால் வந்த காயம் என்றான் அப்பாவியாக.



கணவன் மீது பாசம் போல நடிக்கும் மனைவி பற்றிக் கூறுங்களேன் வியாசரே?

**பாலசுந்தரம் — அம்பன்**

**இந்திய பிரதமர் மோடியின் பஞ்சாப் விஜயத்தில் மோடிக்கான பாதுகாப்பு குறைபாடு குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

இந்தியாவில் மாநில ஆட்சி அதிகாரம் மிக்கது. இந்தியாவின் பிரதமராக இருந்தாலும் அவர் மாநில முதலமைச்சரின் பாதுகாப்பு அனுமதியுடன் தான் மாநிலங்களுக்கு விஜயம் செய்யலாம்.
அந்த வகையில் குஜராத்தில் காங்கிரஸ் ஆட்சி. பிரதமர் ப.ஜ.க. இடையில் விவசாயிகளால் பிரதமரின் வாகனத்தை வழிமறித்தது என்பது ஏற்கத்தக்க விடயம் அல்ல. என்னதான் எதிர்த்தரப்பாக இருந்தாலும் நாட்டின் பிரதமருக்கு கொடுக்க வேண்டிய பாதுகாப்பை குஜராத் முதல்வர் கொடுத்திருக்க வேண்டும். அதில் இருந்து தவறியமை தவறே.

**தியா — யாழ்ப்பாணம்**

**ஈழத்தமிழருக்கு அரசியல் தீர்வு பெற்றுத் தர வேண்டிய பொறுப்பு இலங்கை அரசிற்கா, இந்தியாவுக்கா உண்டு?**

கொடும் போரின் உச்சம். வன்னிப் பெருநிலப்பரப்பில் இலட்சக் கணக்கில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படும் போது மௌனமாய் இருந்தது இந்தியா.
இந்தியாவின் இந்த மௌனத்தினாலேயே அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பது தமிழ் மக்களின் மனங்களில் ஆழமாய் பதிந்து கிடக்கும் வடு.
அதை நீக்குவதற்கு இந்தியா இனப்பிரச்சினை விடயத்தில் தலையிட வேண்டும். இல்லையேல் இந்தியா அதற்காய் அதிகம் வருந்த வேண்டி வரும்.

**சுதன் — குப்பிழான்**

**கொள்கையே இல்லாத கூட்டமைப்பு அரச கொள்கையை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்ததா மாமா?**

மாட்டின் கயிறு நம் கையில் இருக்கும் வரை தான் அந்த மாட்டின் கட்டுப்பாடு நம்முடையதாய் இருக்கும்.
ஒரு காலத்தில் கூட்டமைப்பின் கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத்தரும் கயிறு இருந்தது உண்மை.
இப்போது அது கை மீறி விட்டது.
இனிப் பேசி எந்தப் பயனும் இல்லை. கொள்கை என்பது கவரிமானைப் போன்றது. ஒரு முடி உதிர்ந்தால் கூட அது இறந்து விடும்.
அப்படி என்றால் இவர்கள் எத்தனை முறை இறக்க வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாயிரத்து இருபத்திரண்டே இன்னல்கள் நீக்கிடுவாயே!




இன்னல்கள் வாழ்வுமது இனியும் வேண்டாமென்றே
இல்லாமல் என்றுமே இங்கில்லா தொழிந்திடவே
இருந்த நிலங்கள் இருந்தவர்க்கே சேர்ந்திடவே
இன்றே மலர்ந்திடு இரண்டாயிரத்து இருபத்திரெண்டே!

போர் ஒழிந்துமே ஊர் திரும்பிட முடியாமலோ
ஏர் செய்த நிலங்களிலோ புல் பூண்டுகள் நிறைந்திட்டதே
நீர் நிறைந்த நிலபுலங்களெல்லாம் நிர்க்கதியிலல்லவா
சீர் செய்து உழைத்திடவே சிறப்பாண்டாய் மலர்ந்திடு.

ஒற்றுமையின் ஒளி பலமாய் ஓங்கிடவே
ஓரவஞ்சம் அனைத்தும் முழுமையாய் ஒழிந்திடவே
பஞ்சம் பசி யாவையும் முற்றாய் பறந்திடவே
பாரினில் இன்பமே பொங்கிட இனியவாண்டாய் மலர்ந்திடு

இல்லையினி இடர்களெதுவும் இங்கில்லையென்றே
இருள் நீங்கி ஒளியாய் இன்புற்று இருந்திடவே
இனிய வாழ்வதுவுமே இங்குமே இருந்திடவாய்
இரண்டாயிரத்து இருபத்திரெண்டெ இன்னிங்க மலர்ந்திடு

தங்கத்தமிழ்,
காரைநகர்.

## என்றும் வாழ்வாய்

தொன்மை மிகு செம்மொழி எம் தாய் தமிழே
நீ எத்தனை பெருமைக்குரியவள்
இத்தனை உயரத்தில் நீ கொலு இருப்பதற்கு
உன்னை அழுகுபடுத்திய உன்னவர் பலர்
அன்னை தமிழ் சிறப்புக் கண்டு
அந்நியர் கூட உனை அழகாக்கினரே
ஆனால் தாயே இன்று உன் நிலை...
இனவாத பூதம் விழுங்குவதற்கு
துடியாய் துடிக்கிறது
சாதிய ஆதிக்கமும் உன்னை சிதைப்பதற்கு
பலமான காரணமாகின்றது
மதம் மாற்றிகளே நையாண்டிகள் கூறி
பல்வேறாய் தூசிக்கின்றனர்
பேயென்றும் பிசாசென்றும்
உன் வழி நடப்போரை
நகைக்கின்றனர் தாயே
மானமிழந்த மடையர்கள்
முகவரியற்றவர்களாய் ஆகின்றோம்
என்பதை மறந்து உன் பண்பாடுகளை
எள்ளி நகைத்து பாமரரை ஏமாற்றுகின்றனர்
எது எப்படியானாலும் எவர் எது செய்தாலும்
பூமிப்பந்தில் வியாபித்துள்ள தமிழம்மாவே
நீ அழிய மாட்டாய் என்றும்
மாறா இளமையுடன் யுகம் யுகமாய்
வளமுடன் வீறுகொண்டு வாழ்வாய்

சி.இ.அன்புதுரை
சம்மட்டியோலை, மானிப்பாய்.

## பண்புள்ள மனிதராக மாற்றிடுவிடு இறைவா




பஞ்ச பூதங்களையும் சிருஷ்டித்து
பூவுலகில் உயிரினங்களை படைத்து
உயிரினங்களின் மேலானவனாக
மனிதனைப் படைத்து ஆறறிவையும்
கொடுத்து
அன்பு, அறிவு, நேர்மை, கருணை,
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
யாவற்றையும் நெஞ்சகத்தே அருளி
வையகத்தில் வாழ்வாங்கு வாழவைத்து
இன்புற்றிருந்த இறைவா
இன்று பகுத்தறிவை மறந்த மனிதனின்
கொடூரமான செயல் கண்டு
பொறுக்க முடியாது பொங்கி எழும்
கடலலையின் மேல் தோன்றிய
எம் பெருமானே
ஆணவம் தலைக்கேறி மனிதன் புரியும்
அட்டகாசங்களை அடக்கி
இந்தப் புத்தாண்டிலாவது பண்புள்ள
மனிதனாக மாற்றிவிடு-இறைவா
மாறட்டும் மனித குலம்
மலரட்டும் புதுயுகம்

சி.கஜா,
முரசுமோட்டை.

## மௌனத்தின் தேடல்- 546



## வெல்லத்தமிழ் இனி வெல்லும்

வீரமிது வீரம் தமிழினத்தின் வீரமிது வீரம்
ஓய்ந்திடோம் ஒரு நாளும் எம் கொள்கைகள்
வெல்லும் வரை சாய்ந்திடும் உயிர்கள்–ஆனால்
சாய்ந்திடாது எம் இனம் பாய்ந்திடும் தினம் தினம்
எதிரியின் நெஞ்சினில் வெல்லத் தமிழ்
வெல்லும் என்று நெஞ்சில் உரம் கொண்டோம்
இனி அஞ்சோம் யார்க்கும்.

இந்திரபுத்திரன்.

## வீர விளையாட்டு

உழவர்கள் சூரியனுக்கு நன்றி செலுத்தும்
திருநாளாம் தைப்பொங்கல் தினத்தில்
தமிழர் பாரம்பரிய விளையாட்டுப்
போட்டியில் நெஞ்சுரம் கொண்டு
கொம்புகள் இரண்டு சீவிய
முறுக்கு எடுத்த காளை தனை
இளைஞர்கள் நம்பிக்கை கொண்டு
அடக்குகின்ற வீர விளையாட்டு

கும்பவாழியான்
உடுப்பிட்டி.

## காளையர் தினம்

பாரம்பரிய கலைகளில்
மஞ்சு விரட்டும் ஓர் சிறந்த
வீர விளையாட்டாகும்
அதனை இக்காலம்
மறந்து விட்டது போல, இல்லை
அது ரொம்ப பழைமையானது
பெண்களை மட்டுமா
கொண்டாடுவீர்கள்
இந்த காளையை அடக்கிறவன்
மட்டுமல்ல இந்த உலகத்தை விட்டு
கொரோனாவை அடக்குபவனும்
வீரமகன்தான்.

இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகல்.

## அன்பே சிவம்

அருவமாய் உருவமாய்
அருவுருவமாய்
ஆதியாய் அந்தமாய்
ஆதி சிவனாய்
ஐந்தொழில் புரியும்
திகம்பரனாய்
ஜகமெங்கும் பரந்திருக்கும்
பரம்பொருளாய்
அகோர நடனம் ஆடும்
ஆருத்ரனாய்
முதல்வனாய் மூவுலகாய்
மும்மூர்த்தியாய்–என்
குருவாய் வருவாய்
அருள்வாய்–நல்
உணர்வாய் மலர்வாய்
எனக்குள் நிறைவாய்

லிங்கேஸ்வரன் ஜனார்த்தன்
மறவன்புலோ மத்தி.

## மௌனத்தின் தேடல்- 547



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்

## வெல்லத் தமிழ்

பாய்ந்து வரும் காளைகளை அடக்க
பாய்ந்து வரும் காளைகளே
உம் வீரம் தமிழின் அடையாளமே
ஓங்கி நிற்கும் தமிழின் உரிமை இது...
எப்போதும் எம் அடையாளங்கள்
அழியாமல் காத்திடவே பாய்ந்திடுவோம்
களைகள் மேல் காளையர்கள்...

உதிஷ்ரன்
மாவிட்டபுரம்

## நாவடக்கம்

சீறிப்பாயும் ஜல்லிக்கட்டுக்
காளையை அடக்க முயலும்
மாடு பிடி வீரர்களே! அது போன்றே
நம் நாவையும் அடக்கினால் உலகில்
வீண் சண்டை–சச்சரவுகளை
நாம் என்றும் தவிர்த்திடலாம்


சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**ஈராக் அகதிகளோடு வந்த படகில், திசைகாட்டி இயக்கியவன், செய்மதித் தொலைபேசியுடன் வந்தவன் என்று அவுஸ்திரேலியப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களால், ஆட்கடத்தல்காரர்களோடு தொடர்புடையவன் என்ற சந்தேகத்தில் விசா மறுக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்தான்.**

வலி சொல்லும் தொடர்... 17




அப்படியே யாரையாவது கடலில் பிடித்தாலும் விடுதலை செய்து விடுவார்கள். அது தமக்கொரு பாவமாக அமைந்துவிடும் என்ற நம்பிக்கை கொண்டவர்கள். இந்த நம்பிக்கையைப் படகு விடுகிறவர்கள் செழிப்பாகப் பயன்படுத்துவார்கள். அங்கிருந்து மெல்பேர்ன் முகாமுக்கு இடமாற்றப்பட்டார்கள்.

மெல்பேர்ன் முகாமிலிருந்த தனிப்பெடியன்களுக்கு அமீரா ஒவ்வொரு நாளும் இரண்டாம் சூரியனாக உதித்தாள். இரவில் இன்னொரு நிலவாக ஜொலித்தாள். அமீரா ஒரு தேசத்தின் மகள் அல்ல. இரண்டு நாடுகளின் கூட்டுருவாக்கம்.

ஈராக்கின் ஒளிபொருந்திய கண்களும், இந்தோனேசிய வெண்கல வண்ணமும் நிறைந்த பருவப் பறவை. பதின்மத்தின் பாதியிலிருந்து வெடித்துப் புலர்ந்த தனது எழிலை, உடலெங்கும் தோகை போலப் படரவிட்டிருந்தாள். உலக அகதிகளின் பெருமைக்குரிய பேரழகியாக அவள், முகாம் கண்கள் அனைத்திலும் நிறைந்து வழிந்தாள்.

மதத்தாலும், சமூகக் கட்டுப்பாடுகளாலும் அவுஸ்திரேலியா தனக்கு விடுதலை தந்துவிட்டதாக உணர்ந்தாள்.

பல வருடங்களாக தனியன்களாகவே தடுத்துவைக்கப்பட்டிருந்த முகாம்வாசிகள் பலருக்கு, அமீராவின் வருகை, தடுப்பு வேலிக்குள் ஒரு பேரதிசயம் நுழைந்து கொண்டது போலிருந்தது.

'அல்பா' கம்பவுண்டிலிருந்து பலர் காலையிலேயே எழுந்து நடு மைதானத்தில் பயிற்சி செய்தார்கள். 'சார்ளி' கம்பவுண்டிலிருந்து இரண்டாம் சூரியனின் கதிர் மிதக்கும் நேரத்துக்காகக் காத்திருந்தார்கள். அமீராவைப் பற்றிய விபரங்களை அவுஸ்திரேலியக் குடிவரவு அலுவலகத்தை விட, 'அல்பா' கம்பவுண்ட் பெடியன்கள் அதிகம் அறிந்திருந்தார்கள். இங்குதான் பிரச்சினையே எழுந்தது.

முகாமில் ஆங்கிலம் கற்க விரும்புகிறவர்களுக்கு கமரன் என்ற ஈராக் அகதி இளைஞன் 'அல்பா' கம்பவுண்டில் ஒவ்வொரு நாளும் வகுப்பெடுத்தான். கமரன் யார் சோலிக்கும் போகாதவன். முகாமின் நீண்டகால அகதி. ஈராக் அகதிகளோடு வந்த படகில், திசைகாட்டி இயக்கியவன், செய்மதித் தொலைபேசியுடன் வந்தவன் என்று அவுஸ்திரேலியப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களால், ஆட்கடத்தல்காரர்களோடு தொடர்புடையவன் என்ற சந்தேகத்தில் விசா மறுக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்தான்.

மூன்று வருடங்களுக்கு முன்னர், கமரன் இந்த முகாமுக்கு வந்தபோது, அவனின் நாக்கை எத்தனை தடவை வழித்தெடுத்தாலும் ஓர் ஆங்கிலச் சொல் வராது. கமரன் படிப்படியாக ஆங்கிலத்தைப்பயின்றான். இரவு நேரத்தை அதிகம் வாசிப்பில் செலவு செய்தான்.

வாரமொரு தடவை முகா முக்கு வருகிற ஆங்கில ஆசிரியரிடம் சந்தேகங்களைக் கேட்டான். உச்சரிப்புகளைச் சரிசெய்துகொண்டு, பேச்சுத் துணிவை அப்பியாசம் செய்வதற்கு, முகாம் உத்தியோகத்தர்களோடு ஆங்கிலத்தில் பேசினான். தன்னை ஆங்கிலத்தோடு தொடர்ந்து பிணைத்து வைத்திருப்பதற்கு, முகாமிலுள்ளவர்களுக்கு வகுப்பெடுத்தான்.

'அல்பா' கம்பவுண்டிலிருந்த கமரனின் ஆங்கில வகுப்புக்கு அமீரா வந்து போனது பலருக்கு அனுகூலமாக அமைந்தது. அமீரா நன்றாக ஆங்கிலம் கற்க வேண்டும் என்பதில், அமீராவைவிட பலருக்குக் கரிசனையிருந்தது. திடீரென்று கமரனின் ஆங்கில வகுப்பில் மாணவர்கள் அதிகரித்தார்கள்.

இது ஒருவித பித்துநிலைக் கூத்தாக பலருக்குக் களிப்பூட்டியது. அமீராவுக்குப் பின்னால் பலர் ஓடித் திரிந்தாலும், பங்களாதேஷ் இளைஞன் ரஹீம், அவளது பெயரைக் கையில் வெட்டிவைத்திருந்தான். இது தொடர்பான அறிக்கையொன்று உடனடியாகக் குடிவரவு அமைச்சின் அலுவலகத்துக்குப் பறக்க, அவர்களே அவனை அழைத்து விசாரித்தார்கள். ரஹீம் உன்மத்தச் சிரிப்போடு திரும்பி வந்துவிட்டான்.

தனக்குள் தவித்துக்கிடந்த வாலிபத்தின் வெறுமையையும் தனிமையையும் அமீரா தளும்பத் தளும்ப நிறைப்பதாக ரஹீம் உணர்ந்தான். உடற்பயிற்சி செய்யும்போது அவன் நெஞ்சிலும் அமீராவின் பெயரை வெட்டிவைத்திருப்பதாக, கண்ட சிலர் சொன்னபோதும், அந்த முறைப்பாடு குடிவரவு அமைச்சு வரை போகவில்லை.

அமீரா யாரையும் காதலோடு பார்க்காவிட்டாலும், கனிவோடு மலர்ந்து சிரித்தாள். ஆங்கில வகுப்பு தொடங்கும் வரைக்கும் 'அல்பா' கம்பவுண்ட்டிலுள்ள தொலைக்காட்சியை பார்த்துக்கொண்டிருப்பாள். அப்போது ஒரு சில தமிழ் அகதிப் பெடியளும், அவளுக்கு வேக வேகமாகத் தேநீர் தயாரித்துக் கொடுத்தார்கள். பொங்கிய நுரை அடங்கும் முன்னரே, தன்னிடம் நீட்டுகிற தேநீருக்கு, அமீரா சிவந்த இதழ் வெடித்து 'மிக்க நன்றி' என்பாள். தேவதைகளின் பிரகாசங்களில் ஒன்றான எழில்சிந்தும் புன்னகையைத் தங்கள் கண்களில் சேமிப்பதற்காகப் பலர் தாங்களுக்குள் பலம் பார்த்தார்கள்.

அமீரா ஆங்கில வகுப்பில் லயித்தாள். அதை அவள் எப்போதும் தவறவிட்டதில்லை. வகுப்பு முடிந்த பின்னரும், கமரனிடம் கேள்விகளைக் கேட்டு, பதில் பெற்றுக்கொள்வதில் ஆர்வத்தோடிருந்தாள்.

அமீராவுக்கு இவ்வளவு ஆர்வத்துடன் கமரன் ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பது ரஹீமுக்குள் ஆத்திரக் கண்ணிகளைப் புதைக்கத் தொடங்கியது. அவள் வகுப்பிலிருக்கும் நேரம் முழுவதும், எதையோ இழந்து கொண்டிருப்பவனைப்போல வெளியில் அலைந்தான்.

போகிற போக்கில் சிலவேளைகளில் வகுப்பறைக் கதவில் யாருக்கும் தெரியாமல் உதைத்துவிட்டுப் போனான். அவுஸ்திரேலியா போலவே, அமீராவும் தனக்குக் கைக்கெட்டியும் கிடையாமல் போகக்கூடும் என்று சினந்தான்.

எல்லாக் கண்ணிகளும் ஒரு நாள் சாப்பாட்டு மண்டபத்தில் வெடித்தன. மதியச் சாப்பாட்டுக்கு ரஹீம் வந்தான். ஒரு கையில் தட்டையும் மறு கையில் தண்ணீர்க் குவளையையும் எடுத்துக்கொண்டு, அமீரா வோடிருந்து சாப்பிடுவதற்குப் போய்க் கொண்டிருந்த கமரனை அங்கு கண்டான். அதைப் பார்த்ததும் ரஹீமுக்குள் வலுசர்ப்பம் தீண்டிய வலியெழுந்து பின்தலையில் கொதித்து உடைந்தது.


சாப்பாட்டுத் தட்டுகளை நோக்கி வேகமாகப் போனான். ஒன்றைப் பிடுங்கி கமரனை நோக்கி எறிந்தான். கோபத்தில் எறிந்த இலக்கென்றாலும், குறி பிசகாது கமரனின் கன்னத்தில் அடித்தது. அருகிலிருந்த அமீராவின் மேல் எகிறி விழுந்தது.

(அடுத்தவாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## பிரதிக்ஞை




"இருந்தாலென்ன?" என்று வின வினான் இளைய பல்லவன்.

"கொள்ளையடிப்பார்கள்.

"கலிங்கத்தின் கப்பல்களைத் தானே?"

"ஆம். கொள்ளையில் பங்கும் கேட்பார்கள்!"

"கலிங்கத்தன் பொருளில்தானே?"

திருப்பித் திருப்பிச் சட்டென்று இளையபல்லவன் சொன்ன பதில்களைக் கேட்ட கண்டியத்தேவன் பெரும் பிரமிப்புக்குள்ளானான். பிரமிப்பின் குறி மட்டுமல்ல, பெரும் இகழ்ச்சிக் குறியும் அவன் முகத்தில் பரவலாயிற்று.

"இதை வீரராஜேந்திரர் ஒப்புக் கொள்வாரா?" என்றும் வினவினான் அவன், வெறுப்பு குரலிலும் தொனிக்க. இளையபல்லவன் முகத்தில் கிலேசத்தின் சாயை லேசாக ஒரு விநாடி படர்ந்து பிறகு நீங்கியது. "வீர ராஜேந்திரர் தர்மவான். நல்லெண்ணமுள்ளவர். ஆனால் பாவம் அவர் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை.

கலிங்கத்துடன் சமாதானத்தை நாடி, சமாதான ஓலை கொடுத்துத் தான் என்னைப் பாலூர்ப் பெருந்துறைக்கு அனுப்பினார். ஆனால் அங்கு கிடைத்தது போர். கடற் பிராந்தியத்தில் அமைதியான வர்த்தகத்தை விரும்புகிறார்.

ஆனால் இங்கு நடப்பது தமிழக மரக்கலங்களின் அழிவு. இன்னும் சில நாட்கள் கலிங்கத்தின் அட்டூழியங்களை நடக்க அனுமதித்தால் ராஜராஜரும் ராஜேந்திரரும் ஏற்படுத்திய தமிழர் கடலாதிக்கம் மறைந்து விடும். கலிங்கமும் இந்து ஸ்ரீவிஜயமும்தான் தலையெடுக்கும். சோழ சாம்ராஜ்யத்தைக் கண்டு நடுங்கிய இந்த இரு நாடுகளுக்கும் துணிவு அபரிமிதமாகும். அதை ஒடுக்கவே நான் திட்டமிட்டிருக்கிறேன்.

இன்று என் கையில் இருப்பது ஒரு கப்பல். இன்னும் சில நாட்களில் பல மரக்கலங்கள் இங்கு நம் ஆதிக்கத்தில் நிற்கும். அதற்கு அஸ்திபாரம் போடவும், அக்ஷய முனைத் தலைவனை ஆசை காட்டி நம் வலையில் இழுக்கவும் இங்கு வந்தேன். நீங்கள் கப்பலைப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரமிக்கும்படியான செய்தியுடன் திரும்புகிறேன்." என்று கூறிய இளைய பல்லவன் விடுவிடு என்று கப்பலின் மேல்தளப் படிகளிலிருந்து இறங்கித் தன் அறைக்குச் சென்று ஒரு நாழிகை கழித்துத் திரும்பி வந்தான். அப்படி வந்தவன் மிகப் படாடோபமாகப் புது உடை அணிந்திருப்பதை அமீரும் கண்டியத்தேவனும் கவனித்தார்கள். அவன் கச்சையிலிருந்து அழகிய சிறு பையொன்று தொங்கிக் கொண்டிருந்ததையும் கவனித்தார்கள். அந்தப் பையில் இருந்தது என்ன என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது மட்டுமின்றி, 'அதனால் பெரும் பலன் உண்டென்பதையும் அவர்கள் அறிந்தே இருந்தார்கள்.

கண்டியத்தேவனை விட அமீர் நிலைமையை வெகு திட்டமாக அறிந்திருந்தான். கொள்ளைக்காரர் சுபாவம் விசாரிக்காமல் யாரையும் ஒழித்துவிடுவது என்பதை அறிந்திருந்ததால் இளையபல்லவனின் திட்டத்தைக் கேட்கவோ சர்ச்சை செய்யவோ யாரும் தயாராயிருக்க மாட்டார்களென்பதை அவன் புரிந்து கொண்டிருந்தானாகையால், "இளையபல்லவரே! கரைக்கு நீர் போக வேண்டாம். கோட்டைத் தலைவனோடு பேச வேண்டுமென்றால் நான் போய் வருகிறேன்" என்றான். "என்னைவிட நீ சிறந்தவனா?"

"உங்களைவிடக் கொள்ளைக்காரர் சுபாவத்தை நான் நன்றாக அறிந்தவன். உங்களுக்கு முன்பே நான் அகூதாவின் சீடன்.

"கொள்ளை அதிபரின் பிரதம சீடருக்கு வணக்கம். இருப்பினும் இதை நானே செய்து முடிக்க இஷ்டப்படுகிறேன்" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே நூலேணி வழியாக மரக்கலத்திலிருந்து இளைய பல்லவன் படகில் இறங்கவே படகு கரையை நோக்கி விரைந்தது. அமீரும் கண்டியத்தேவனும் மரக்கலத்திலிருந்தே கரையில் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

படகு கரையை அடைந்ததும் இளையபல்லவன் மிகுந்த நிதானத்துடன் கரையில் இறங்கி, சாவதானமாக மணலில் நடந்து கோட்டையை நோக்கித் தன்னந்தனியே சென்றான். தன்னந்தனியே ஒரு மனிதன் வந்ததால் பயத்தை இழந்த குடிசை மக்கள் பெரும் கூச்சலுடன் கூட்டமாக அவனை நோக்கி ஓடி வந்தார்கள்.

அந்தக் கணமே அவன் ஆயுள் 'முடிந்துவிடுமென்று நினைத்துக் கப்பலில் நெஞ்சு திடுக்கிட நின்ற அமீரும் கண்டியத்தேவனும் பெரும் ஆச்சரியத்துக்குள்ளானார்கள். இளையபல்லவன் ஏதோ சொன்னதைக் கேட்டதும் மந்திரத் தால் கட்டுப்பட்டவர்கள் போல் கொள்ளைக்காரர் அவனைத் தொடர்ந்து செல்வதை இருவரும் கவனித்துப் பிரமிப்புக்குள்ளானார்கள்.

அந்தப் பிரமிப்பு அடுத்த அரை நாழிகையில் விலகியது. அவர்கள் எதிர்பார்த்தது நடந்தே விட்டது. கோட்டை மதில்களிலிருந்து பறந்து வந்த பெரும் விஷ ஆம்பு இளைய பல்லவன் இதயத்தில் வெகு வேகமாகப் பாய்ந்தது. அதைக்கண்ட கொள்ளைக்காரர் பெரும் கூக்குரலிட்டார்கள்.

அமீரும் கண்டியத்தேவனும் இளையபல்லவன் கதியை நினைத்து மனம் உடைந்து நின்றார்கள். கலிங்கத்தை அழிக்க அவன் செய்த பிரதிக்ஞை, அவன் ஆயுளை அத்தனை அற்ப ஆயுளாகவா அடிக்க வேண்டும் என்று ஏங்கவும் செய்தார்கள்.

## சொப்பனமா?

அக்ஷயமுனைக் கோட்டைத் தளத்திலிருந்து அதி துரிதமாக வீசப்பட்ட விஷ ஆம்பு இளையபல்லவனின் மார்பில் தைத்ததும் அது அவன் உயிரைக் குடித்து விட்டதாகவே எண்ணித் துடிதுடித்த அமீரும் கண்டியத்தேவனும் அடுத்த விநாடி வியப்பின் எல்லை வசப்பட்டுத் தங்கள் கண்களையே நம்பாமல் ஏதோ இந்திர ஜாலத்தைப் பார்ப்பது போல் கரையைப் பார்த்து வாயைப் பிளந்து கொண்டு கப்பல் தளத்தில் நின்றார்கள்.

சென்ற ஒரு வருடத்தில் அகூதாவிடம் இளைய பல்லவன் மரக்கலப் போர்க் கலையை மட்டும்தான் கற்றானா அல்லது மந்திரமும் கற்றானா என்ற எண்ண அலையில் புரண்ட அவர்கள், அவனது ஆயுள் அற்ப ஆயுளாக அடிக்கும் சக்தி உலகில் இல்லையென்று தங்களுக்குள்ளேயே சொல்லிக் கொண்டார்கள்.

விஷ அம்பிலிருந்தும் தப்பி, கோட்டையை நோக்கி அலட்சியமாக மேலும் நடந்த படைத் தலைவனின் துணிவு பயங்கரத் துணிவாகவேபட்டது, அவ்விருவரின் பதைபதைத்த உள்ளங்களுக்கு.

ஆனால் கோட்டைக்குள் செல்லத் தீர்மானித்த விநாடியிலிருந்து இளையபல்லவன் மட்டும் பின்னேற்படும் அபாயங்களை முன்கூட்டியே யோசித்துவிட்டானாகையால் சிறிதளவும் அச்சமில்லாத இதயத்தினனாய், நிதானம் லவலேசமும் கலங்காதவனாய்.

தனது பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து கொண்ட பின்பே கப்பலை விட்டுக் கிளம்பினான். அவன் கப்பலின் மேல் தளத்திலிருந்தபோது மார்பைப் பாதி திறந்து காட்டிய அரை அங்கியை அணிந்திருந்தாலும் தனது அறைக்குப் போய்ப் பிரயாணச் சித்தனாய் வந்தபோது கழுத்திலிருந்து முழந்தாள்வரை தொங்கிய உடலைப் பூரணமாக மறைத்து நின்ற ராஜரீக உடையையே அணிந்திருந்தான்.

அதுவும் தன் வசமிருந்த உடைகளில் பெரும் சரிகை வேலைப்பாடுகள் செய்யப்பட்ட மிகவும் படாடோபமான உடையையே பொறுக்கி அணிந்திருந்தான். அந்த உடையின் கச்சையும், விலையுயர்ந்த மணிகளும் முத்துகளும் பதிப்பிக்கப் பெற்றிருந்ததன்றி, கச்சையில் செருகப்பட்டிருந்த சிறு வாளின் பிடியிலும் ரத்தினங்கள் இழைக்கப்பட்டிருந்தன. அந்தக் கோலத்திலிருந்த ஒரே பழைய அம்சம் அவன் வாள் ஒன்றுதான்.

சென்ற ஒரு வருட காலத்தில் பல போர்களைக் கண்டிருந்த அந்த வாளை மட்டும் மாற்றாமல் மற்ற சகலத்தையுமே மாற்றிக்கொண்டு பெரும் தோரணையுடனேயே அவன் கப்பல் தளத்திலிருந்து கீழிருந்த படகில் இறங்கினான். எப்பொழுதும் அதிக படாடோபத்தை விரும்பாத கருணாகர பல்லவன் அன்று படாடோபத்தின் சின்னமாய் விளங்கியதைக் கண்டு பிரமிப்பும் வியப்பும் கொண்டதல்லாமல் எதிர்நோக்கியிருந்த ஆபத்தை முன்னிட்டு, கலவரமும் அடைந்த அமீரும் கண்டியத்தேவனும் அவன் போவதைக் கண்டு அசைவற்று நின்று கொண்டிருந்தார்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத திரைவிமர்சனம்




சரவணனும் ராதிகாவும் அண்ணன் தங்கைகள். ராதிகா மகனின் காது குத்து விழாவிற்கு சரவணன் வீம்பிற்காக அதிகமாக செய்முறை செய்கிறார். பின்னர் சரவணன் வீட்டில் நடக்கும் விழாவிற்கு ராதிகா குடும்பத்தார் செய்முறை செய்யாமல் விடுகின்றனர். இதனால் கோபமடையும் சரவணனின் மனைவி விஜி சந்திரசேகர், ராதிகாவின் கணவர் மாரிமுத்துவை அசிங்கப்படுத்த, அவர் தற்கொலை செய்து கொள்கிறார்.

கோபம் தீராத விஜி சந்திரசேகர் செய்முறை பணத்தை ராதிகாவிடம் இருந்து எப்படியாவது பெற்றுவிட வேண்டுமென்று இருக்கிறார். இந்நிலையில் விஜி சந்திரசேகர் மகளும் ராதிகாவின் மகனும் காதலிக்க ஆரம்பிக்கிறார்கள். இறுதியில் விஜி சந்திரசேகர் ராதிகாவிடம் இருந்து செய்முறை பணத்தைப் பெற்றாரா? இல்லையா? ராதிகாவின் மகன், விஜியின் மகள் காதல் என்ன ஆனது? என்பதே படத்தின் மீதிக்கதை.

இப்படத்தை இயக்கியதோடு மட்டுமல்லாமல் நடிக்கவும் செய்திருக்கிறார் ஜி.ஆர்.எஸ். பாரதிராஜாவின் உதவியாளரான இவர், மண் மணம் மாறாமல் அவர் பாணியிலேயே படத்தை இயக்கியிருக்கிறார். கிராமங்களில் திருமண நிகழ்ச்சி, காதுகுத்து நிகழ்ச்சிகளில் நடக்கும் செய்முறையை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் ஜி.ஆர்.எஸ். இவருடைய நடிப்பு பெரிதாக கைகொடுக்கவில்லை. ஆனால், திரைப்படத்தை இயக்கியதில் கவனிக்க வைத்திருக்கிறார்.

ஜி.ஆர்.எஸ்.அம்மாவாக நடித்திருக்கும் ராதிகாவின் நடிப்பு படத்திற்கு பெரிய பலம். அண்ணன் பாசம், தாய்ப்பாசம் என நடிப்பில் பளிச்சிடுகிறார். குறிப்பாக கிளைமாக்ஸ் காட்சியில் உணர்வுபூர்வமான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். இவருக்கு இணையாக போட்டி போட்டு நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் விஜி சந்திரசேகர். இவருடைய மிரட்டலான நடிப்பு ஒரு சில இடங்களில் மிகைப்படுத்தலாக இருக்கிறது.

ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியான நடிப்பை கொடுத்து கவர்ந்திருக்கிறார் சரவணன். மாரிமுத்து மற்றும் நாயகியாக நடித்திருக்கும் லவ்லின் ஆகியோர் கொடுத்த வேலையை செய்திருக்கிறார்கள்.

செய்முறை ஒன்றை வைத்து மட்டும் திரைக்கதை அமைத்து படத்தை இயக்கியது சாமர்த்தியம். இருப்பினும் படத்தின் முதல் பாதியில் ஜி.ஆர்.எஸ். செய்யும் காமெடி பெரியதாக எடுபடவில்லை. அதுபோல் இரண்டாம் பாதி நீளத்தை குறைத்து இருந்தால் கூடுதலாக ரசித்திருக்கலாம்.

இளையராஜாவின் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்கும் ரகம். பட்டுக்கோட்டை ரமேஷின் கமரா கிராமத்து அழகை அப்படியே படம் பிடித்து இருக்கிறது.

மொத்தத்தில் "மருத" சிறப்பான விருந்து... ஆனால் சுவை குறைவு.






## ஒஸ்கார் தகுதி பட்டியலில் "ஜெய் பீம்"

த.செ.ஞானவேல் இயக்கத்தில் சூர்யா, மணிகண்டன், லிஜோமோல் ஜோஸ், ரஜிஷா விஜயன், பிரகாஷ்ராஜ் உள்ளிட்ட பலர் நடித்திருந்து கடந்தாண்டு வெளியான படம் "ஜெய்பீம்". உண்மைக் கதையை மையமாக கொண்டு வெளிவந்த இந்தப் படம் விமர்சன ரீதியாக பெரும் வரவேற்பை பெற்றது.

திரைப்படங்களுக்கான ரேட்டிங் குறித்து கணக்கிடும் ஐ.எம்.டி.பி தளத்தில் அதிக ரேட்டிங் பெற்றதில் "ஷாஷங் ரிடெம்ப்ஷன்" திரைப்படத்தை முந்தி "ஜெய்பீம்" சாதனை படைத்தது. அதேபோல், ஒஸ்கார் விருதுக்கு அடுத்த நிலையாக கருதப்படும் கோல்டன் குளோப் விருதுக்கான போட்டியில் "ஜெய் பீம்" இடம்பெற்றது.

சமீபத்தில் ஒஸ்கார் அகடமியின் அதிகாரபூர்வ யு-டியூப் பக்கத்தில் ஜெய் பீம் படத்தின் காட்சிகள் பதிவேற்றப்பட்டிருந்தன. இந்நிலையில் ஆஸ்கர் விருதுக்கான தகுதிப் பட்டியலில் "ஜெய் பீம்" திரைப்படம் இடம் பெற்றுள்ளது.

பல்வேறு பிரிவுகளில் ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள 276 திரைப்படங்களில் "ஜெய்பீம்" திரைப்படமும் இணைந்துள்ளது. ஒஸ்கார் விருது வழங்கும் நிகழ்ச்சி வரும் மார்ச் 27ஆம் திகதி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு ஆஸ்கர் விருதுக்கான தகுதிப் பட்டியலில் சூர்யா நடித்த "சூரரைப் போற்று" திரைப்படம் இடம்பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : திரிசூலம்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்கள் : கே.ஜே.யேசுதாஸ், வாணி ஜெயராம்



திருமாலின் திரு மார்பில் ஸ்ரீதேவி முகமே
தீபங்கள் ஆராதனை ஊரெங்கும் பூ வாசனை

திருமாலின் திரு மார்பில் ஸ்ரீதேவி முகமே
தீபங்கள் ஆராதனை ஊரெங்கும் பூ வாசனை

மலை மகள் சீராட்ட கலை மகள் பாராட்ட
மலை மகள் சீராட்ட கலை மகள் பாராட்ட
செங்கனிச் சுவையோடு கதை பேசும் மன்றம்
கண்டேன் இங்கே கண் முன்னமே
செங்கனிச் சுவையோடு கதை பேசும் மன்றம்
கண்டேன் இங்கே கண் முன்னமே

சேர்ந்து பாடுங்கள் தேடுங்கள் சுகங்களை
பொன்மணித் தேரல்லவா சேர்ந்து பாடுங்கள்
தேடுங்கள் சுகங்களை பொன்மணித் தேரல்லவா.
திருமாலின் திரு மார்பில்...

புது மலர் தாலாட்டு தழுவிடும் பூங்காற்று
புது மலர் தாலாட்டு தழுவிடும் பூங்காற்று

மன்மதன் ரதிதேவி விளையாடும் கோலம்
நானும் நீயும் அவ்வண்ணமே
மன்மதன் ரதிதேவி விளையாடும் கோலம்
நானும் நீயும் அவ்வண்ணமே

மாலை ராகத்தின் ஆனந்த மயக்கமே
மங்கலத் தேன் சிந்தவா
மாலை ராகத்தின் ஆனந்த மயக்கமே
மங்கலத் தேன் சிந்தவா
திருமாலின் திரு மார்பில்...

பாலெனும் நீரோடை படகுகள் பொன்னாடை
பாலெனும் நீரோடை படகுகள் பொன்னாடை

பஞ்சணை சுகம் காட்டும் பனி மேடை வண்ணம்
ஆடல் பாடல் என் எண்ணமே

நேரம் காலங்கள் ஏன் இந்த இடத்திலே
சித்திரப் பூச்சூட்டவா..

திருமாலின் திரு மார்பில் ஸ்ரீதேவி முகமே
தீபங்கள் ஆராதனை ஊரெங்கும் பூ வாசனை

# மும்முனை இராஜதந்திர பொறிமுறையை உடைக்கப் போகும் கிருஸ்ணர் யார்...?

ஈழத் தமிழரின் அரசியல் வெற்றி என்பது தமிழ் அரசியல் தரப்பின் நேர்த்தியான வெளியுறவுக் கொள்கையில்தான் பெரிதும் தங்கியுள்ளது எனலாம். மாறிவரும் பூகோள அரசியல் நகர்வையும் இனி மாறப்போகும் மற்றும் பிராந்திய அரசியல் நகர்வையும் ஒரு புள்ளியில் வைத்து சரியாக புரிந்தால் மட்டுமே, ஈழத் தமிழ் அரசியலை தமிழ் அரசியல் தலைமைகள் எதிர்காலத்தில் சர்வதேசம் ஊடாக தென்னிலங்கையிடம் கொண்டு நகர்த்த முடியும்.

மாறி வரும் பூகோள அரசியல் நகர்வையும் மற்றும் மாறப்போகும் பிராந்திய அரசியல் நகர்வையும் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடிய தமிழ் அரசியல் தலைமை ஈழத் தமிழரிடம் சமகாலத்தில் உண்டா? என்ற கேள்விக்குப் பதில் மௌனம் என்ற முடிவுக்கே ஈழத் தமிழர் வரவேண்டியிருக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது.



ஈழத் தமிழர்கள் தற்போது இருப்பது ஒரு யுத்த களத்தில் அல்ல. அவர்கள் இருப்பது ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட ஜனநாயக அரசியல் களத்தில். இங்கு தற்போது தேவை பத்ம வியூகங்களை உடைக்கும் நவீன அர்ஜினர்கள் அல்ல. உலகின் போக்குக்கு ஏற்ப சிறந்த அரசியல் வியூகங்களை தோற்றுவிக்கக்கூடிய நவீன கிருஸ்ணர்களே என்பதை ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழர் அரசியலில் மாறி வரும் பூகோள அரசியலையும் மற்றும் மாறப்போகும் பிராந்திய அரசியலையும் தீர்க்க தரிசனத்தோடு புரிந்து கொண்டு அதற்கான பல இராஜதந்திர திட்டங்களை வகுத்து சர்வதேசத்தோடு எந்தத் தொய்வும் இல்லாமல் தம் வெளியுறவுக் கொள்கையை அதில் பரீட்சித்துப் பார்த்து சர்வதேசத்தின் துணையோடு தென்னிலங்கையை நோக்கி நகர்ந்து செல்லும் நவீன கிருஸ்ணரின் விவேகத்துடன் கூடிய தமிழ் அரசியல் தலைமையே ஈழத் தமிழருக்கு தற்போது தேவைப்படுகிறது. இங்கே ஈழத் தமிழ் அரசியல் தலைமைகளில் யார் நவீன கிருஸ்ணர்...? என்பதே தமிழர் முன் இருக்கும் மிகப் பெரும் கேள்வியாகும்.

கட்சி, சின்னங்களின் அரசியலுக்குள் அகப்பட்டு வெறும் சுயநல அரசியலுக்குள் மட்டும் இருந்து கொண்டு உள்நாட்டு அரசியல் நகர்வையே சரிவர புரிந்து கொள்ள முடியாத தமிழ் அரசியல் தலைமைகள் இருக்கும் வரை. ஈழத் தமிழ் அரசியல் பரப்பில் ஈழத் தமிழர் தீர்வுத் திட்டம் என்பது வெறும் குதிரைக் கொம்பாகவே இருந்து வருகிறது.

வெறும் கட்சி அரசியலில் இருந்து ஈழத் தமிழரின் உரிமை அரசியலுக்குள் ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் வரவேண்டும் என்பதே ஈழத் தமிழரின் தற்போதைய நீண்ட பிரார்த்தனையாக உள்ளது.

யுத்தம் முடிவடைந்து 2009 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலங்களில், ஈழத் தமிழ் அரசியல் பரப்பில் தமிழ் அரசியல் தலைமைகளின் அரசியல் என்பது தங்களின் சொந்த விருப்பு வெறுப்புகள் சார்ந்ததாகவே பின்னிப் பிணையப்பட்டு வந்திருக்கிறது. அதில் பெரும்பாலும் சொந்த இனத்தின் நலன்கள் என்றும் அவர்களால் பேசாப் பொருளாகவே இருந்து வந்துள்ளது.

ஈழத் தமிழினம் சார்ந்த சாதாரண பிரச்சினைகளையே தீர்க்க முடியாத தமிழ் அரசியல் தலைமைகள் எப்படி ஈழத் தமிழர் அரசியல் உரிமைப் பிரச்சினையை சர்வதேசத்தோடும் இலங்கை அரசோடும் பேசித் தீர்க்கப் போகின்றார்கள் என்ற சிந்தனை ஒவ்வொரு ஈழத் தமிழனிடமும் இன்றைய காலங்களில் இழையோடிப் போய் இருப்பது பெரும் கவலை அளிக்கக் கூடிய ஒரு விடயமாகும்.

உள்நாட்டு அரசியல் நகர்வுகளை மட்டும் வைத்துக் கொண்டு ஈழத் தமிழரின் அரசியல் உரிமைப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைக்க முடியாது. முன்னர் கூறியது போல் மாறி வரும் பூகோள அரசியலையும் மற்றும் மாறப் போகும் பிராந்திய அரசியலையும் ஒன்றாக ஒருங்கிணைத்தே ஈழத் தமிழ் அரசியலை சிங்களப் பெருபான்மையின அரசிடம் கொண்டு சேர்த்து அழுத்தம் கொடுக்க முடியும். இதுவே இலங்கை அரசியலின் இன்றைய கள யதார்த்தமாகும்.

ஏனெனில் சீனா - இந்தியா - அமெரிக்கா என்ற மும்மூர்த்திகளின் அரசியல் இராஜதந்திர ஆடுகளமாக இலங்கை முற்று முழுதாக மாறி வருவதாலும் சிங்கள பெருபான்மையின ஆட்சியாளர்கள் சீன சார்பை கொண்டிருப்பதாலும் தமிழ் அரசியல் தலைமைகள் இலங்கை - இந்தியா - அமெரிக்கா இடையே இருக்கும் மும்முனை இராஜதந்திரப் பொறிமுறையை உடைத்து இந்தியா - அமெரிக்கா ஆகிய இரு நாடுகளையும் ஈழத் தமிழர் தீர்வுத் திட்டத்தில் ஒரு புள்ளியில் ஒருங்கிணைப்பதன் மூலம், இரு நாடுகளிடமும் புதிய வெளியுறவுக் கொள்கையை புதுப்பிப்பதன் ஊடாக, "13" ஆவது திருத்தச் சட்டத்தையும் தாண்டி சமஷ்டி முறையிலான ஒரு தீர்வை ஈழத் தமிழர் தமக்குள் நிலை நிறுத்திக் கொள்ள முடியும்.

இலங்கையின் ஆட்சிப்பீடத்தையே தீர்மானிக்கும் பெரும் சக்தியாக பூகோள வல்லரசுகளும் பிராந்திய அரசுகளும் இருக்கின்ற நிலையில் இலங்கையின் வடக்கு-கிழக்கு தாயகத்தில் சிறு இனக் குழுவாக இருக்கும் ஈழத் தமிழினம் மிகவும் ஆழ் ந்த சிந்தனை ஊடாகவே எதிர்காலத்தில் பயணிக்க வேண்டிய சூழல் உருவாகி யிருக்கிறது.

பூகோள வல்லரசான அமெரிக்கா ஊடாக பிராந்திய அரசான இந்தியாவை கையாள்வதன் மூலமாக, தென்னிலங்கைக்கு சில அழுத்தமான அரசியல் பிரயோகங்களையும் சில அரசியல் அதிர்வுகளையும் ஈழத் தமிழருக்காக உண்டாக்க முடியுமா...? என்ற நோக்கில் ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் சற்று சிந்தித்துப் பார்ப்பது மிகவும் நல்ல ஒரு மாற்றத்தை உருவாக்கும் என நம்பலாம்.

மாறி வரும் பூகோள அரசியலிலும் இனி மாறப்போகும் பிராந்திய அரசியலிலும் ஈழத் தமிழர் நலன்களின் மீதான கரிசனை தென்படுகிறதா..? என்று ஆராய்ந்து பார்க்கும் சந்தர்ப்பமாயும் இதை பரிசோதித்தும் விடலாம்.

ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் வாய்ச் சொல்லில் மட்டும் வீரராய் இல்லாமல் விவேகத்துடன் கூடிய செயலிலும் கிருஸ்ணர் போல மாபெரும் கர்மயோகியாய் இருப்பதற்கு தங்களுக்குள் நவீன இராஜதந்திர கிருஸ்ணரைத் தேடுவது அல்லது தங்களுக்குள்ளே உருவாக்குவது என்ற ஒரு ஒருமித்த உறுதிப்பாட்டுக்கு வரும் வரை ஈழத் தமிழினம் ஒரு நிரந்தர அரசியல் தீர்வுத் திட்டத்துக்கான தாகத்தோடு காத்திருக்க வேண்டியதுதான்.

**சாம்-ரமேஸ்குமார்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈபிள் கோபுரம் (பிரான்ஸ்)


குஸ்டோவ் ஈபிள்

ஈபிள் கோபுரம் பிரான்ஸ் நாட்டின் தலைநகரம் பாரிஸ் நகரத்தில் சாம்ப் டி மார்ஸ் என்னும் இடத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

1887 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி தொடங் கப்பட்ட இதன் கட்டுமானப் பணிகள் 1889 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி முழுமை பெற்றுத் திறந்து வைக்கப்பட் டது. பிரான்சில் சமூக, அரசி யல், கலாசார மாற்றங்களுக்கு வித்திட்ட பிரெஞ்சுப் புரட்சி நடந்து 100 ஆண்டுகள் நிறை வையொட்டி பாரிசில் நடை பெற்ற உலகப் பொருட்காட்சிக் கான நுழைவு வாயிலாக அமைக்கப்பட்டதுதான் ஈபிள் டவர்.

கி.பி.1777 ஆம் ஆண்டில் பிரான்சை ஆண்ட பதினாறாம் லூயி ஆட்சிக் காலத்தில் நாடெங்கும் பஞ்சம் தலைவிரித் தாடியது. மன்னராட்சியின் ஆடம்பர செலவுகளால் அரசாங்க கஜானா காலியானது. புதிய வரிகளை விதிக்கும்படி நிதி அமைச்சர் ஜக்குவஸ் நெக்க ருக்கு நெருக்கடி தந்தான் பதினாறாம் லூயி.

ஏற்கனவே வாழ்வாதாரங் களை இழந்து தவிக்கும் மக்கள் மீது புதிய வரிகளைத் திணிப் பதில் நெக்கருக்கு விருப்ப மில்லை.

பிரான்ஸ் நாட்டில் அன்றை க்கு இருந்த சட்டங்கள் படி நிலப் பிரபுக்கள், மதகுருமார்கள், உயர் குடியினருக்கு வரி விலக்கு இரு ந்து வந்தது. ஆனால் அவர்களும் அரசுக்கு வரி செலுத்த வேண் டும் என்ற சட்டத்திருத்தத்தைக் கொண்டு வர நெக்கர் விரும் பினார்.

நெக்கரின் திட்டத்துக்குப் பெரும் எதிர்ப்பு பிரபுக்களிடமி ருந்து கிளம்பியது. அவர்களின் சூழ்ச்சியால் அவர் பதவியி லிருந்து விலக்கப்பட்டார்.

அவருக்குப் பிறகு சார்லஸ் டி கலோன் நிதி அமைச்சர் பொறுப்பை ஏற்றார். ஆரம்பத் தில் அரசருக்கு ஏற்றபடி நடந்து கொண்ட கலோன் பின்னர் அரசின் நிதி இருப்பின் உண்மை நிலை புரிந்து அவரும் பிரபுக் கள் மீது வரி விதிக்க வேண்டும் என்று கூற ஆரம்பித்தார். அதில் விருப்பம் இல்லாத அரசர் அவர்கள் மீது வரிவிதிக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிடுவதிலேயே குறியாக இருந்தார்.

இதன் காரணமாக மன்னராட் சியை அகற்றி மக்களாட்சியைக் கொண்டு வர இயக்கங்கள் தோன்றின. நெக்கர் இந்த எழுச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தார்.

1789 ஆம் ஆண்டு ஒக்டோபர் 5 ஆம் திகதி பெண்கள் அரசுக்கு எதிராக திரண்டு ஆயுதங்களோடு அரசர் இருந்த வெர்சாய் என்னும் இடத்துக்குச் சென்றனர்.

மக்களின் பேராதரவு காரண மாக மன்னருக்கு எதிரான இயக்கங்கள் வலுப்பெற வேறு வழியின்றி வெர்சாய் என்ற இடத்தை விட்டு அரசர் வெளி யேறினார். சரித்திரத்தில் அழி யாத இடம்பெற்ற இந்த பிரெ ஞ்சுப் புரட்சி நிகழ்ந்து நூறா வது ஆண்டு நிறைவுக்கான கொண்டாட்டத்தில் ஒரு பகுதி யாக ஈபிள் கோபுரத்தை நிறு வும் எண்ணம் அலெக்சாண் ட்ரா குஸ்டோவ் ஈபிள் என்ப வருக்குத் தோன்றியது.

(தொடரும்)

# கோபுரத் துளிகள்

குஸ்டோவ் ஈபிள், பின் னாளில் நியூயோர்க்கில் உள்ள சுதந்திரதேவி சிலை யில் வலுவான இரும்பு உள் கூட்டினை வடிவமைத்துப் பொருத்தியவர்.

இரண்டாவது தளத்தில் ஒரு அச்சகம் உள்ளது. அதில் ஈபிள் கோபுரச் செய் திப் பத்திரிகை ஒன்று வெளி யாகிறது. அதன் ஒரு பகுதி யில் பார்வையாளர்கள் பெயர் கள் வெளியாகின்றன.

1923 ஆம் ஆண்டு பியார்ரே லாப்ரிக் என்பவர் தரைத்தளத்திலிருந்து முதல் தளம் வரை படிகளின் வழியே மிதிவண்டியில் சென்று சாதனை படைத் தார்.

1984 ஆம் ஆண்டு இர ண்டு ஆங்கிலேயர்கள் பார சூட்கள் மூலம் ஈபிள் கோபு ரத்தின் மீது வந்திறங்கினர்.

ஈபிள் கோபுரத்தைப் பிரதி எடுப்பது போல உலகம் முழுக்க 30 கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன. எத்தனை கோபுரங்கள் வந்தாலும் ஈபிள் கோபுரத்துக்கு கிடைக் கும் புகழும் ஈர்ப்பும் இன் றைக்கும் குறையவே இல்லை.




காவேரி

விடிய விடிய போனை நோண்ட வேண்டியது



காலைல பார்த்தா எதையோ வெட்டி முறிஞ்ச மாதிரித் தூங்க வேண்டியது

மாதவன்

நேரத்தை மிச்சம் பண்ணுவதற்கு கண்டுபிடிக்கப்பட்டதுதான் கொம்பியூட்டரும் மொபைல் போனும்



நாங்கல்லாம் நேரத்தை செலவு பண்றதேஅதுலதான்

சுவைதா

ஒருநாள் ஸ்கூலுக்கு லீவு போட்டு மறுநாள் போகும்போது

நண்பர் - நேற்று கணிதபாட சோதனை நடக்கலடா
நண்பர் - 2 நேற்று விஞ்ஞானபாட மிஸ் வரலடா
நண்பர் - 3 நேற்று மதியம் புல்லா பிரீ பீரியட் தான்டா




மாதவி

அடுத்த வீட்டு பூனை அந்த வீட்டு அம்மாவை விட்டுட்டு எங்க அம்மாவையே சுத்தி சுத்தி வரும் ஏன்னு தெரியுமா உனக்கு




எங்க அம்மா பேரு எலிசபெத்

கவிதா

பொங்கல் முடிஞ்சிருச்சு
அதுதான் எப்பவோ முடிஞ்சிருச்சே
நான் எங்க வீட்டு பிரிட்ஜிலை இருந்த பொங்கலைச் சொன்னேன்



உதயன்

அந்தப் பொண்ணு 98 மார்க் எடுத்து 2 கம்மி யாருச்சேன்னு அழுதுட்டு இருக்கு நீ 13 மார்க் எடுத்துட்டு எப்டிடா சிரிச்சுக்கிட்டு இருக்க?



அந்த 13 மார்க் எப்டி எடுத்தேன்னு எனக்கே தெரியல சேர்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

275

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நல்வழிப்படுத்த முயலும் பொழுது

மனிதன் ஒவ்வொருவனும் தனித்துவமானவன். அவனின் ஆற்றலும் ஆளுமையும் கூட தனித்துவமானவைதான். ஒவ்வொரு மனிதனுள்ளேயும் அவனுக்கே உரித்தான பல திறமைகள் புதைந்திருக்கின்றன. ஒருவன் போன்று இன்னொருவன் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவ்வாறு இருக்கவும் முடியாது.

எமது பழைய பதிவுகளை புரட்டிப்பார்ப்போமாக இருந்தால் பாரதியார் போன்று திருவள்ளுவர் இல்லை. அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி போன்று ஆறுமுகநாவலர் இல்லை. தியாகி பொன் சிவகுமாரன் போன்று தந்தைசெல்வா இல்லை. நடிகர் விவேக் போன்று வடிவேலு இல்லை.

இவர்கள் ஒவ்வொருவருமே ஆற்றலும் அர்ப்பணிப்பும் உள்ளவர்கள்தான். ஆனால் ஒருவர் போல் மற்றவர்கள் மாறுவதற்கு முயற்சி செய்யவில்லை. ஒவ்வொருவருமே தமது பாணியில் பயணித்து மக்களின் மனதில் இடம்பிடித்திருக்கிறார்கள்.

துர்அதிர்ஷ்டவசமாக நாம் எமது பிள்ளைகளையும் மாணவர்களையும் வழிநடத்த அல் லது நல்வழிப்படுத்த முயலும் பொழுது இன்னொருவருடன் ஒப்பிட்டுப் பேசும் பழக்கத்தை வளர்த்து வைத்திருக்கின்றோம். இது ஒரு வேதனையான உண்மை.

"அவனைப்பார் 4 மணிக்கு எழும்பிப்படிக்கின்றான். ஆனால் நீ", "அவனுடைய எழுத்தைப் பார் உன்னுடைய எழுத்தையும் பார்..". "அவன் எழும்பி எவ்வளவு உசாராய் கதைக்கின்றான் அவனைப் பார்த்து பழகு..". "அந்தக் காலத்திலே நான் என்ன மாதிரி எல்லாம் செய்தனான் ஆனால் நீ"

இவ்வாறாக ஒருவனைப்போல இன்னொருவனை புடம் போட்டு மாற்றுவதற்கு கடுமையாக முனைந்து நிற்கின்றோம். எதற்கு எடுத்தாலும் ஒப்பிட்டு கதைப்பதை அன்றாட நடவெடிக்கையாகக் கொண்டிருக்கின்றோம்.

ஒருவனுக்கான அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் அவன் சார்ந்த அவனது



நிறை குறைகள் சார்ந்ததாக அவனது சுபாவம் சார்ந்ததாக இருக்க வேண்டுமே அன்றி ஒப்பிடும் பொறிமுறையாக இருக்க முடியாது.

ஒப்பிட்டு அறிவுரை சொல்ல முயல்வது அவர்களை காயப் படுத்தி பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடுவதுடன் குளிக்கப் போய் சேறு பூசிய கதை போல அல்லது பிள்ளையார் பிடிக்க குரங்காக மாறிய கதை போல் ஆகிவிடுவதுடன் அது அவர்களின் பல சுகாதாரப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கும்.

ஒப்பிட்டுப் பேசுவதால் ஏற்படும் தீய விளைவுகளை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். அவற்றில் முக்கியமானவை மனக் குழப்பம், விரக்தி, பொறாமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, மனச்சோர்வு, கற்றல் செயற்பாடுகளில் ஆர்வக் குறைவு போன்றவையாகும்.

சகோதரர்களிடையே பொறாமை உணர்வு வளர்வதற்கும் இது காரணமாகி விடுகின்றது. பிள்ளைகளை வழி நடத்தும் போது எமது முக்கியமான இலக்கு எதுவாக இருக்க வேண்டும் என்று சிந்திப்பது பயனுடையதாக அமையும்.

இந்த இலக்கு பரீட்சைகளில் சித்தி பெறுவதா? உயர் கல்வி கற்பதா? போட்டிகளில் வெற்றி பெறுவதா? ,செல்வம் சேர்ப்பதா? அல்லது நல்ல மனம் கொண்ட மனிதாபிமானமுள்ள ஒரு மனிதனாக உருவாக்குவதா? என்பதை தீர்மானிக்க வேண்டும்.

ஒரு நல்ல மனிதனை உருவாக்குவதற்கு ஒப்பிட்டுப் பேசப்படும்பேச்சு உதவியாக அமையாது.

சுயமாக ஒருவன் சிந்தித்து வாழ்வில் உயர்ச்சி அடைவதற்கு அவனில் உள்ள திறமைகள் அடையாளப்படுத்தப்பட்டு ஊக்கப் படுத்தப்பட வேண்டும். அந்தத் திசையிலே அவனை முன்னேறுவதற்கு அவன் சார்ந்த அறிவுரைகளும் வழிகாட்டல்களும் உதவியாக இருக்கும். ஆனால் இது ஒரு பொழுதும் ஒப்பிட்டுப் பேசும் பேச்சாக அமைந்து விடக் கூடாது.

ஒருவரை விமர்சித்து மதிப்பிட்டு அவருடன் முரண்பட்டு கோபமுற்று போட்டியிட்டு அவரின் நடத்தைகளை மாற்ற முயன்று வாதிட்டு எமது மன அமைதியையும் நேரத்தையும் மன மகிழ்வையும் விரயமாக்குவது ஆரோக்கியம் ஆகாது.

அதற்குப் பதிலாக அவரை அவரது தனித்துவங்களுடனும் குணாதிசயங்களுடனும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, சேர்த்துக் கொள்ளக் கூடிய மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்வது பயன் தரும்.

வாதிட்டுப் பேசும் வார்த்தைகளிலும் பார்க்க மௌனங்கள் பலமானவை. பல அர்த்தங்கள் பொதிந்தவை. மௌனங்களும் மன்னிப்புகளும் பலரை சிந்திக்க வைத்து நல்வழிப்படுத்தும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org